தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண் 72.

# மடல் திரட்டு

C

தமிழ்நாடு அரசு

1992

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் வரிசை எண்: 72.

# மடல் திரட்டு

பதிப்பாசிரியர்:
டாக்டர் எஸ். செளந்தரபாண்டியன்
எம்.ஏ. (தமிழ்); எம்.ஏ. (ஆங்.); பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சேப்பாக்கம்
சென்னை-5

©
தமிழ்நாடு அரசு
1992

விலை ரூ. 43-00

TAMIL NADU GOVERNMENT ORIENTAL
MANUSCRIPTS SERIES NO.72

# MADAL THIRATTU

**Edited by**
**Dr. S. SOUNDARAPANDIAN**
**M.A., M.A., B.Ed., Dip.Skt., Ph.D.,**
**Curator**
**Government Oriental Manuscripts Library,**
**Chepauk,**
**Madras - 5.**

©

GOVERNMENT OF TAMIL NADU
1992

PRICE: Rs. 43-00

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை | vii - xvii |
| 2. | செயங்கொண்டமாமுனி வளமடல் | 1 - 39 |
| 3. | பாப்பைய பிள்ளை உலாமடல் | 41 - 94 |
| 4. | பின்னிணைப்பு | 95 |

# GENERAL EDITOR'S NOTE

Government Oriental Manuscripts Library, formed in full shape in 1869, preserves nearly 70,000 manuscripts and 25,000 printed books earning a glorious name to Tamil Nadu. Scholars from all over the world visit this library for their doctorate degrees and general researches in Tamil, Sanskrit, Telugu, Urdu, Marathi, Kannada and Malayalam.

In order to enable such scholars, Government Oriental Manuscripts Library brings to light its thesaurus. So, this book is one such endeavour.

Present volume is a compilation of two madal genres namely, Jayangkonda Mamuni Vala Madal and Pappayapillai Ula Madal, both edited from palm-leaf manuscripts of Government Oriental Manuscripts Library.

But for the perseverence of Dr. Avvai Natarajan, M.A., Ph.D., Secretary to Government, Tamil Development-Culture Department and Mr. Natana Kasinathan, M.A., Director, State Department of Archaeology this literary piece would not have seen the light of the day.

The help rendered by Dr. Muthaian, M.Com., Ph.D., Registrar, Tamil University, and Mr. S. Palaniappan, Assistant Registrar Tamil University is memorable.


Dr. S. Soundarapandian,<br>
M.A., M.A., B.Ed., Dip.Skt., Ph.D.,<br>
Curator,<br>
Government Oriental Manuscripts Library,<br>
Chepauk,<br>
Madras-5.

# பதிப்புரை

இதுகாறும் அச்சில் வராத இரண்டு மடல் நூற்கள் இங்கு பதிப்பிக்கப்பெறுகின்றன. செயங்கொண்ட மாமுனி வளமடல், பாப்பையபிள்ளை உலாமடல் எனும் இரு மடல் நூற்களும் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையத்தில் ஓலைச்சுவடிகளாக D 2417, D 2220 ஆகிய எண்களில் பாதுகாக்கப்படுபவைகளாம்.

## இலக்கணங்கள்

தொல்காப்பியர் பெருந்திணைக்கண் மடல் திறம் பற்றிப் பேசுகிறார். இருப்பினும் பாதாதிகேசம், கேசாதி பாதம் முதலிய கூறுகளையெல்லாம் பிற்றைக்காலப் பாட்டியல் நூற்களே நுவலுகின்றன.

- பன்னிரு பாட்டியல் (பா.244),

வெண்பாப்பாட்டியல் (பா.32), பிரபந்த மரபியல் (பா.37), சிதம்பரப் பாட்டியல் (பா.37), நவநீதப் பாட்டியல் (பா.25) இலக்கண விளக்கம் (பா. 47), முத்து வீரியம் (பா.49,50) முதலிய பாட்டியல் நூற்கள் மடலுக்கு இலக்கணம் கூறி நிற்கின்றன.

## வளமடலும் உலாமடலும்

உலாமடல் என்பது, கனவிலே தான் கண்ட ஒரு பெண்ணைக் காமுற்று, அவளை அடையாவிடின், உயிர்விடுவேன் என்று பாடுதல் ஆகும். வளமடல் என்பது, அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கினும் இன்பமே சிறந்தது என்று வலியுறுத்திப் பாடுவதாகும்.

காளமேகப் புலவர் (கி.பி.15 நூ.ஆ) இயற்றிய சித்திர மடல் உலாமடலாகும்.

வருணகுலாதித்தின் மடல் வளமடலாகும்.

வளமடலில், தலைவன் பெயரில் எதுகை அமைத்து, நூல் முழுவதும் அவ்வெதுகையே அடிகளில் வருமாறு பாடுப. இவ்வமைப்பு உலாமடலில் இலது.

சொன்னமா தரைக்கண்டு கனவிற் சேர்ந்தோன்
துணிவன்மட லென்றதுலா மடல் ...." (பா.37)

எனச் சிதம்பரப் பாட்டியல் பகர்வது காணத்தகும். கனவிற்கண்ட பெண்ணை அடைய விரும்பிப் பாடுவது உலாமடல் என்று இந்நூற்பா ஓதுகிறது. இதே பாங்கில், கனவிற்கண்ட பெண்ணோடு துய்த்துப் புணர்ந்தின் புற்றதைத் தன் பாங்கனுக்குக் கூறுவதாக அமையும் மற்றொரு சிற்றிலக்கியம் 'அனுராகமாலை' எனப்படும்.

உலா இலக்கியங்களில், பெண் தலைவன் மீது காதல் கொண்டு பாடுவாள். உலாமடலில், தலைவன், பெண் மீது காமுற்றுப் பாடுகிறான். இவ்வாறு உலாவும், உலாமடலும் வேறுபடுகின்றன.

மடலேறும் முறை

தொல்காப்பியம் முதலான இலக்கண நூற்கள் மடல் பற்றிப் பாடினாலும் மடல் ஏறும் முறைமை பற்றி அவை கூறிற்றில.

முதன் முதலாகத் தஞ்சைவாணன் கோவைக்கு உரை எழுதிய சொக்கப்ப நாவலர்தான், மடல் ஏறுகின்ற முறை பற்றி விளக்கமாகப் புகல்கிறார்.

தலைவி மீது காமம் கொண்ட தலைவன், அவளை அடைய வேறு வழி இல்லாததால், அவளுடைய உருவத்தைத் துணியில் வரைந்து, அவ்வுருவத்தின் மேற்புறம் அவள் பெயரை எழுதிக் கையிற் பிடித்துக்கொள்வான். பிடித்துக் கொண்டு இருக்கும் அவன் உடலில் ஆடை இரா; உணவு கொள்ளான்; அவன் மீது தீப்பட்டாலும் அதைப் பொருட் படுத்த மாட்டான். மழைக்கு அசையான், வெயிலுக்கு ஆடான். இந்தநிலையில், அவன் நான்கு தெருக்கள் கூடும் ஓர் இடத்தில் நின்றுகொண்டு தலைவியையே நினைந்து கொண்டு இருப்பான். அஞ்ஞான்று மக்கள், நீ மடல் ஏறுவியோ? நீ வென்றுவிட்டால் அவளை நாங்கள் உனக்கு மணமுடித்துத் தருகிறோம் என்பார்கள். அதற்குச் சம்மதித்தால், அவனை அரசன்முன் இட்டுச்செல்வர். அரசன் முன்னிலையில் அவன் மடலேறுவான். அஃதாவது பன மரம், பனம் மட்டை முதலியன கொண்டு வண்டி ஒன்று செய்து, அதன்மீது குதிரை வடிவமாகப் பனங்கருக்குக்கொண்டு செய்து தலைவன் முன் நிறுத்தப்படும். தலைவன், அதன் மீது ஏறுவான். வண்டியில் ஒரு கயிறு கட்டி, அதைத் தெருவில் இழுத்துக்கொண்டு செல்வர். அப்போது, பனங்கருக்கு அவன் உடம்பிலே பட்டு, உதிரம் கொட்டும். அவ்வாறு உதிரம் கொட்டினால், அவனைக் கொலை செய்வர்; அஃதன்றி, வீரியம் கொட்டினால் அவனுக்கு அவளை மணந்து கொடுப்பர்.[1]

**உண்மையா? கற்பனையா?**

மேற்குறித்தாங்கு மடல் ஏறுவகை கூறிய சொக்கப்ப நாவலர், இறுதியில், இவை புலவரால் நாட்டிய வழக்கு என்கிறார். அஃதாவது கற்பனை என்பது அவர் கருத்து. மு.வ. அவர்களும் மடல் ஒரு கற்பனைத் துறையே என்பார்.[2]

1. தஞ்சைவாணன் கோவை, சொக்கப்ப நாவலருரை (1893) ப. 89.

2. தமிழ் இலக்கிய வரலாறு (1980), ப. 122.

மு. இராகவையங்கார் அவர்கள், மடலேறுதல் என்பது உண்மையாகவே பண்டு இருந்த ஒரு பழக்கம் என்கிறார். இம்மடலேற்றம் தமிழ்நாட்டில் முன்னாளில் வழங்கிவந்த தற்கொலை முறைவகை என்பதும் அதற்கு மடல்மாது ஒரு கருவியென்பதும் தெரியலாம்[3] எனக் கூறுவார் அவர். ஆகலின், இஃது ஆய்வுக்குரிய ஒன்றாம்.

### பெண் மடலேறுதல்

காதலன் மடலேறலே சங்க மரபு. தொல்காப்பியம் மடலேற்றம் பெண்டிர்க்கு இல்லை என்கிறது.

எத்திணை மருங்கினு மகடூஉ மடன்மேற்
பொற்புடை நெறிமை யின்மை யான்"

(தொல்.பொரு. 35)

எனல் காணலாம்.

கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்"

(குறள்)

என வள்ளுவரும் பெண்மடலேற்றத்தை இகழ்வார்.

ஆயினும் திருமங்கையாழ்வார், தன்னை நாயகியாகக் கொண்டு, பெண் மடலேறுவதாகப் பாடி ஒரு புது மரபு உருவாக்கியுள்ளார். இவருக்கு, இத்தகைய பெண் மடலேற்றத்திற்கான கருவைக் கொடுத்தது கலித்தொகைப் பாடலாக இருக்கலாம்.

நனவினால் ஞாயிறே காட்டாய்நீ யாயிற்
பனையீன்ற மாவூர்ந் தவன்வரக் காமன்
கணையிரப்பேன் கால்புல்லிக்கொண்டு"

(கலி.147)

---

3. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி (1929) ப. 33.

எனும் கலித்தொகைப் பாடலில் பெண் கூறும் கூற்று, திருமங்கை மன்னனுக்குப் பெண் மடலேற்றம் அமைக்க வழி தந்திருக்கலாம்.

பிற நூல்களில் மடல்

காமம் உழந்து வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி"

எனும் குறளைப் பல மடல்களும் தம் முடிப்பின்கண் ஆளுகின்றன.

என்றல்ல பலபாடி மன்றிடை மடலூர்ந்தன்று

எனப் புறப்பொருள் வெண்பாமாலை பாடும்.

விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி" (குறு. 282)

எனக் குறுந்தொகையும்,

ஈசன சாந்து, மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே"
(கோ.74)

எனத் திருக்கோவையாரும், மடல் பற்றிக் குறிப்பிடுகின்றன. இன்னும், நெய்தற்கலி 21, 22, 24, குறுந்தொகை 17, 174, 182, 286 முதலிய பாக்களிலும் மடல் பற்றிப் பேசப்படுவதை அறியலாம். மடல்பாடிய மாதங்கீரனாரின்குறுந்தொகைப் பாடலும்,[4] நற்றிணைப் பாடலும்[5], மடலேறல் குறித்துத் தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவனவாக அமைந்தன.

4. குறுந்தொகை பா. 182

5. நற்றிணை பா.377

மடலேறிட வாகை புணைந்தபிரான் (பா.59).

என நந்திமன்னன் பாராட்டப் பெறுகிறான்.[6] பிற்காலக் கலம்பகங்களில் இம்முறை வந்திலது.

நூலாசிரியர்

செயங்கொண்ட மாமுனி வளமடலை யாத்தவர் செயங்கொண்டமாமுனி எனும் பெரும் புலவராவார். இவரது காலம் முதலியன பற்றி எதுவும் அறியக்கூடவில்லை. இவ்வளமடலில் வரும் சான்றுகளால் இவர் சமணருக்கு எதிரி என்பது மட்டும் அறியக்கிடக்கின்றது.

ஆதிநாதன் எனும் குறுநில மன்னன் மீது இவ்வளமடலை மாமுனி எழுதியுள்ளார். இவ்வாதிநாதன் காலமும் அறியுமாறில்லை. போர் பல வென்றவன் என்பது நூல் கூறுவதாகும்.

மாதீப மானதொறு மூதூர் மதுரையென்று
மூதூ ரிரண்டுடையோன்." (கண்.194)

என வரலால், ஆதிநாதனின் பகுதி மதுரைப் பகுதியாதல் வேண்டும்.

பாப்பையபிள்ளை உலாமடலை இயற்றிய புலவர் பெயர் தெரிந்திலது.

பாப்பையபிள்ளை,

பெருமுளசை ஊரினான் (கண்.115)

அம்பைநகர் தங்கு முகில் (கண்.272)

6. நந்திக் கலம்பகம் பா. 59.

எனக் கூறப்படுதலால், பாப்பையபிள்ளை எனும் சிற்றரசனின் ஊர் பெருமுளசை என்பதையும் அம்பை எனப்படுவது அவனாண்ட பகுதி என்பதையும் அறியலாம். இவ்விரு ஊர்களும் தஞ்சைமாவட்டத்துச் சீர்காழிப் பகுதியில் உள்ள ஊர்களாம்.

பாப்பையபிள்ளை கர்நாடகத்தில் வரிவசூலிப்பவராக டியூப்ளேயால் நியமனம் செய்யப்பெற்றவர். பின்னர் திருவாதி, தீர்த்தநகரி, பரங்கிப்பேட்டை, புவனகிரி, வேங்கடம்மாள் பேட்டை என்னும் ஊர்களைக் கொண்ட பஞ்சமஹால் நாட்டுக்குத் தலைவராயிருந்தவர்.[7]

டியூப்ளே (Dupleix) யின் காலம் கி. பி. 1697 - 1763 ஆகும்.[8] ஆகலின், பாப்பைய பிள்ளையின் ஆட்சிக்காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாதல் வேண்டும். எனவே, பாப்பையபிள்ள உலாமடல் நூலும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் துணியலாம்.

இராமநாடகம் எழுதிய சீர்காழி அருணாசலக் கவிராயர் ஓரமயம் பாப்பையபிள்ளையிடம் பத்து உரூபா கேட்டதாகவும் யாதுகாரணம் பற்றியோ பிள்ளை இல்லை எனவே,

> பத்துரூ பாயனைநேர் பாப்பையவே ளேயுனக்குப்
> பத்துரூ பாயென்ன பஞ்சமோ? - முத்துநகை
> வீழிவாய்ப் பாலுண்ட வேந்தன் பிறந்தசீ
> காழியரு ணாசலன்யான் காண்"

---

7. வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், கர்நாடக ராஜாக்கள் சரித்திரம் ப.99.

8. இந்தியவரலாறு (1961) அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, பக்.118, 129.

என்று அக்கவிஞர் பாடியதாகவும் கூறுப.[9] ஆயினும், பாப்பையபிள்ளை பெருவள்ளலாகவே, இம்மடல் நூலில் பாராட்டப்பெறுகிறார் என்பது இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

நூற்சிறப்பு

செயங்கொண்டமாமுனி வளமடல் படிப்பவர், இந்நூலை இயற்றிய செயங்கொண்ட மாமுனி என்பார். பரணி பாடிய செயங்கொண்டாரோ என ஐயுறுவர். கண்ணிகள் மிகச் சிறந்தன.

திருமங்கையாழ்வார், 'நாராயணன்' எனும் பெயருக்கு எதுகை அமைத்துச் சிறிய திருமடலையும் 'கண்ணன்' எனும் பெயருக்கு எதுகை கொண்டு பெரிய திருமடலையும் புனைந்தாற்போல், 'ஆதிநாதன்' பெயருக்கு எதுகை பெற்றுச் செயங்கொண்டமாமுனி வளமடல் நடைபோடுகிறது.

சைவ சமயக் குரவர்களின் சமணக்காழ்ப்பினைச் செயங்கொண்ட மாமுனி வளமடலிற் காணலாம்.

சாதனைகள் செய்யுஞ் சமணீர்நும் முத்தியோர்
போதுறைவ துண்டோ? பொறியற்றீர் போமறியீர்!
(கண்.121)

எனவரும் கலிவெண்பாக் கண்ணியால் தெளியலாம்.

வடமலைப்பால் தென்மாளுவர் என்றாங்கு வரும் முரண்தொடை நயமும், விளக்கிருக்கத் தீத்தேடி (கண், 95) போன்ற உவமை நலமும் பொதுளிய நூல் செயங்கொண்ட மாமுனி வளமடலாம்.

செயங்கொண்ட மாமுனி வளமடல் ஓதுவார்க்கு, நூலாசிரியரின் குறள், சிலம்பு, கோவையார் முதலிய தீந்தமிழ் நூற்புலமை புலனாம்.

---

9. தமிழ்ப்புலவர் வரிசை, புத். 10 (1956), ப.65.

# செயங்கொண்ட மாமுனி
# வளமடல்

கொன்றை முடித்தார்க்குங் கோபால ரானார்க்கு
மன்று படைத்தார்க்கு மாளல்லோம் - என்றும்
மடப்பாவை யாரை வசமாக்கத் தூது
நடப்பாரே தெய்வ நமக்கு

## மாதர் திறம் பழித்தல் தகாது

1. மாத ரிளமுலைகள் வாழ்க மனைவாழ்க்கை
நீதி யுலகி னெறிநிற்க நின்றியங்குஞ்

சாதி சராசரங்கள் எல்லாந் தன்மகர
கேதனன்ற னோராணைக் கீழ்நடப்ப மேலையோர்

ஓதிய வெண்பத்து நான்குநூ றாயிரமாம்
பேத மவையனைத்தும் பெண்ணுருவோ டாணுருவா

யாதி யுலகுதித்த வன்றுமுத லின்றளவுஞ்
சாதனமாய்க் கூடி வருகின்ற சன்மார்க்க

---

கொன்றை முடித்தார் - சிவன்
கோபாலர் - கண்ணன்
படைத்தார் - பிரம்மா

2. சராசரம் - உலகம்; மகரகேதனன் - மன்மதன்

4. சன்மார்க்கம் - நல்லொழுக்கம்

மோதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தாமடங்காப்
பேதையிற் பேதையா ரில்லென்று சொல்லுகின்ற

மூதுரையைக் கேட்டேயு மூர்க்கரா யோர்ப்பின்றி
மாதர் திறம்பழிக்கும் வன்னெஞ்சக் கள்வராய்க்

## கோதையர் நாட்டத்திற்குக் காட்டுக்கள்

கோதையர்பாற் கூடக் குளமாழ்வான் குறையமுழுந்
தேதுகொடு திட்டாந்த மிட்டுரைக்கு மென்னேயோ

பீதாம் பரன்றன் பெருந்தேவி மாரிருவர்
சேதாம்பல் வாயூறுந் தேனூறல் தேக்கியதும்

போதாமை யாலன்றோ போய்ப்பதினா றாயிரவர்
சீதமுலை வெள்ளத் தினிற்றிளைத்த தென்னேயோ

யாதவர்தஞ் செல்வத்தை யிச்சித்தோ பித்தராய்ப்
பாதி யுடம்பொருத்திக் கீந்தும் படர்சடைமேன்

மீது மொருத்திக்கு வீடு கொடுத்தரனார்
பேதை யெனவுரைக்கும் பித்தர்கா ளித்தரணிப்

---

6. ஓர்ப்பின்றி - தெளிவில்லாது.

7. திட்டாந்தம் - உதாரணம்.

8. பீதாம்பரன் - திருமால்; தேவிமார் இருவர் - பாமா, உருக்மணி; சேதாம்பல் - செவ்வாம்பல்.

9. திளைத்தல் - அனுபவித்தல்

10. இச்சித்து - விரும்பி; ஈதல் - கொடுத்தல்.

11. அரனார் - சிவன்; தரணி - உலகு.

பூதாதி பல்லுயிர்க்கு ளெல்லாம் புலப்படுத்து
மூதாதை யாரொருத்தி முன்னடியைக் கண்டுபதைத்

தேதேனு மொன்றை நினைந்தேனுஞ் செய்தலுமே
யாதி யகத்தியனு மங்கே வசிட்டனுந்தங்

காதலராய்ப் பண்டு கலசத்தே போந்தகதை
வேதா கமமன்றோ மிகத்தன் னேசக்

15. காத லுழந்திலரோ காமக் குடில்வாழ்க்கை
நீதி யுலகி னெறிநிற்க மேன்மகனாய்

பேதைப் பருவத்தே பிள்ளை முருகவேள்
தாதைக்குத் தக்க மகனாய்த் தலைக்கற்று

கோதைக் குறமங்கை கொங்கையினைக் கோட்பட்ட
வாதைத் தனத்துக்கு மாறுண்டோ வேருண்ட

---

14. நிமியின் சாபத்தால் உடலிழந்த வசிட்டர், பிரமனை வேண்ட, பிரமன் வரந்தந்தபடி, மித்திரன் வருணன் எனும் இருவரின் விந்து ஒரு குடத்தில் சேர்ந்தபோது மீண்டும் உடன் பெற்றார் என்ப. அகத்தியர் இவரின் உடன் பிறந்தவர்.

14. மிகதனரேசக என ஓலையில் உள்ளது.

15. உழலுதல் - சுழலல், ஆடுதல். மெய்க்கடாய் என ஓலையிலுளது.

16. தாதை - தந்தை.

17. குறமங்கை - வள்ளி

போதிற் றுதிரம் பொசியாது புண்வாய்கள்
சேதித்த கள்ளிபோ(ல்) வெள்ளருவி சேந்தொழுகச்

சாதற் கிசைந்துந் தலையிறுதி வந்துமவன்
பாதத்தை யித்தனைநாள் பற்றிவிடா தேயிருந்த

20. மேதித் தலையவுணன் விக்கிரமணிக்கருமஞ்
சாதிக்க நட்ட சயத்தம்ப மன்றோமற்

றீதெலா நிற்கவி ந்திரனார் மந்திரித்துக்
காதற் கடைகூட்டக் காமப்பால் வேட்டுத்தம்

போத முடைமையாய்ப் பூஞையாய்ப் போந்தாரைக்
கோதமனா ரிட்ட கொடுஞ்சாபஞ் சாபமே!

யூரிய மன்றோவஃ தொன்றா யிரமானது
யாது மினீர்கா வறியீரோ ரயித்தரைமேற்

சாதுரிக வான்கலாச சந்திரனார் தாரகையா
மாதி னிளமை வளமைப் பசையெல்லா

25. மூதி யுருக்கி யுறிஞ்சிக் குடித்துள்ள
கோதை யுமிழ்தலுமே கொண்டுபோய்ப்பண்டையினும்

---

18. சேதித்த - வெட்டிய

22. பூஞை - பூனை
அகலியையை இந்திரன் கள்ளத்தில் புணர்ந்துவர, வெகுண்ட கௌதம முனி சாபம் இட்டனன் என்ப.

24. தாரகையாகிய உரோகிணியைச் சந்திரன் வலிந்து அடைந்து புதனைப் பெற்றனன். பின்பு உரோகிணி மீண்டும் சுக்கிரனை அடைந்தனன் என்ப.

போதனைகள் செய்து புதனையவள் போய்ப்பற்ற
சூதகமு நீங்கிச் சுதராமெனக் கைக்கொண்டு

பீதகனார் இந்திரனார்க் கென்றும் பிரதானராய்
மேதைகளின் மேம்பட்டா ரல்லரோ மேலொரு(நா)

ளாதரவு தீர வனலோனை முன்விழுங்குஞ்
சூதனைய கொங்கைச் சுவையை யவாவினான்

மாதரும ராசன் வயிறு புகவிழுங்கிப்
போத விடாதே புதுக்கியது காமத்தின்

30. சாதனமா மென்றென்றே சம்பிரதங் காட்டவோ
சீதயரி காரமோ செய்ததே பொய்த்தவஞ்செய்

காதறைகான் கேளீரோ காண்டா வனமெரித்த
போதகாமன் போரேறு பொன்முடியை(ப்)
போக்கெரிந்து

மூதறிவு பட்டோடி முண்டித்துக் கண்டித்துப்
பாதித் துவராடை போர்த்துப் பகவரா

யோதக் கூடற்றுவரை யுள்புக் கதுமுத்திக்
கேதுவழி யன்றன்றே யேறெடுத்தோன் பின்பிறந்த

26. சூதகம் - தீட்டு

27. பீதகன் - வியாழன். வியாழன், இந்திரனின் குருவாகக் கருதப்படுபவர்.

28. அனலோன் - சூரியன்; சூது - சூதாடு கருவி, கொங்கைக்கு உவமை.
குந்தி தேவியை தருமன் விரும்பினான் என்பது கருத்து.

33. - ஏறு - பன்றி. பன்றியுரு எடுத்தவன் திருமால்

மாதுதன் கொங்கை வழிதேடி யேயன்றோ
மேதகு மாதவந் தான் வேண்டினான் மீண்டேயு

35. மாதுங்க வித்தகனார் வத்தகனார் தத்தையைமுன்
சீதங்க னோதுவித்துக் கீண்முளையே கொண்டுபோய்க்

கோதன்மை செய்து குருதக் கணைகொண்ட(?)
தேதென்றென் வாயா லெடுத்துரைக்கே னித்தரைமே

நாதனா நம்பிரிதி யம்பகனார் வேழம் பக்
கோதை பிடித்து(க்) குடித்தநீர் தாங்குடித்தற்

கேது துறையென் றறியாது நின்றபழங்
காதையிது கல்வெட்ட வேண்டாமோ காமத்துத்

தாதலப்பா லன்ன தமையந்தி யையிமையோ
ராதரிப்பத் தானு மதனுக் கிசைந்தவள்பாற்

40. தூது நடந்தவனைக் காண்டலுமே தொண்டையடைத்
தேதி லுறைபடுநீ யென்றே யிளமனப்பட்

---

34. மாது, சுபத்திரையைக் குறிக்கும். சுபத்திரை பொருட்டு அருச்சுனன் தவவேடங்கொண்டு துவாரகை சென்று அவளை மணந்து அபிமன்யுவைப் பெற்றான் என்ப.

36. குருதக்கணை - குருவுக்குக் கொடுக்கும் தட்சிணை.

38. துறை - நீர்த்துறை

39. இந்திரன், வாயு, அக்கினி முதலியோர் தமயந்தியை விரும்பி, நளனைத் தூதாக மாய உருக்கொடுத்து அனுப்பினர்.
இமையோர் - வானோர்; ஆதரிப்ப - அன்புவைக்க.
தாதலம் - நோய். காம நோய்.

பேடா து மணம்புணர்ந்திட் டுத்தமனை யித்தனைநாள்
ஆதி நளன்சனனென் றாருரைத்தார் மீனாற்றங்

காத மொருநான்குங் கந்திக்க நிந்திக்குஞ்
சாதியிலே யுள்ளாளைத் தாகித்த மோகத்தால்

பாதையிலே பாய்ந்து பராசரனார் தாம்புணர்ந்து
போதுவதன் முன்செனித்த புத்திரனா ரல்லவோ

வேத வியாசனார் மேல்குலத்தோர் கீழ்குலமாம்
பேத முளவாமோ பேதையர்க்குப் பெண்பிறப்பென்

45. றேது நலமே குலமென்றே யுய்ந்தோமால்
மாது திலோத்தமையோர் மாயக் கிளிவடிவா

யாதி வியாச ரருகே பறத்தலுமே
பாதி யுடலுருகிப் பாய்ந்துபோய்ப் போர்ந்திருந்த

---

41. சனன் - வஞ்சகன்

42. கந்திக்க - மணக்க; தாகித்தல் - விரும்புதல்

43. பராசரன், யமுனையைத் தாண்டவேண்டி ஓர் ஓடத்திற் செல்லும்போது, சத்தியவதி என்னும் பெண்ணைக் கண்டு, காமுற்று அவளைப் புணர்ந்தான். அங்ஙனம் பிறந்தவர் வேதவியாசர் என்ப.

45. திலோத்தமை கிளி வடிவில் குழந்தைப் பேறு இல்லாது வாடிக்கொண்டிருந்த வியாசர் அருகே சென்றதும், வியாசர் அவளையே நினைத்து அக்கினி உருவாக் கினார். அவ்வக்கினியினின்றும் தோன்றியவனே ஆரணி.

மாதினுந் தான்பொய்யோ மகனார் சுகனாராஞ்
சாதனமும் பேருமே சான்றன்றோ தோன்றவுமக்

கோதாது வைத்தே னொழுக்கத் திவையெல்லா
மேதாவி கட்கும் வீமார்ச் சுனநகுல

சாதேவ ரென்றிவர்க்குத் தைய லொருத்தியுமே
மாதேவி யானகதை மாபா ரதமென்றும்

50. வேதா கமமென்றும் வேதவிதி யாய்க்கிடந்த
தாதேசம் பெற்றா வடாதனவே செய்யத்தான்

போதாதே யீறுக்கார் போதுவார் போதமிலாச்
சாதகமே யன்றிலே சக்கர வாகமே

யோதிமமே யுள்ளிட்ட புள்ளெல்லா மோரிடத்துக்
காதல்மடப் பேடையைக் கையகலில் மெய்யுருகி

நோதகவு செய்வதல்லா னும்மைப்போ லெம்மோடு
வாதுசெய்ய மாட்டாவே! மற்றும் சேதனமாஞ்

---

47. கிளி வடிவான திலோத்தமையை நினைந்திருந்தபோது தோன்றி குழந்தையாதலின் சுகன் என வியாசரின் குழந்தைக்குப் பெயராயிற்று.

49. தருமன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் எனும் ஐவருக்கும் தேவியாக விளங்கியவள் பாஞ்சாலி. தையல் - பெண்.

51, 52. சாதகம், அன்றில், சக்கரவாசம், ஓதிமம் ஆகிய பறவைகள் எப்போதும் இணை பிரியாமல் வாழ்பவை. அன்றில் கிரவுஞ்ச பட்சி எனவும் அழைக்கப்படும். ஓதிமம், அன்னம் எனப்பெறும். புள் - பறவை.

53. நோதகவு - துன்புறல்; வாது - சண்டை, தருக்கம்

சூதவ சோக சுரவகுள முன்னிட்ட
பாதவங்கள் போல்வனவும் பல்லவங்கள் போல்சிவந்த

55. சீத மலரடிதான் செங்கைப் பசுந்தளிர்தான்
சீத வமுதமொழிக் கிஞ்சுகவா யூறல்தான்

மீது படுதலுமே மீறி மலர் துதைந்து
தாது மிலையுந் தளிருமாய் நின்றாலுஞ்

சேதன மாயுள்ள திருவுடையீர் நும்வாயால்
கோதை நறுங்குழலாள் கோட்டந் துறந்திருத்த

லாகாதே யென்றுரைத்தா லாகாதே யந்நாளே
போதா தலர்விழும் பிண்டிக்கீழ்ப் போதாத

மாதவமேற் கொண்டு மடவார் திறங்கெடுவீர்
தீதுகெட ரென்றுசில சித்திரஞ்செய் தேற்றுவதும்

---

54. பாதவம் மரம்; பல்லவம் - தளிர்.

55. கிஞ்சுகம்-சிவப்பு.

56. துதைந்து-நெருங்கி; தாது-பூவிதழ்; ஆலும்- தொங்கும்.

57. சேதனம்- அறிவு; கோட்டம்-கூட்டம்.

58. போதாது-அகலாது; மலர்-மலர்ந்த பூ; பிண்டி அசோகமரம்.

59. மடவார் - பெண்கள்

பாதகர்போ லும்மைப் பாங்கறுத்துத் தம்முடைய
வாதரவு தீர வனுபவிப்ப தன்றாயிற்

## முத்திக்கு வித்து

போதுபுகா தேசரிதை போக்கவோ வாகமத்தி
னாதியாய் நின்றனவு நான்கே நான்கினுக்குப்

பாதி யறம்பொருளென் றவ்விரண்டுங் காமத்தைத்
தாதையொடு தாயாய்ச் சனிப்பிக்கு மிக்கரும்

மீதுணர்வு முத்திக்கு வித்தா மெனவுணர்ந்து
மீதுணரப் பாராதே விட்டுக்குறை கண்டதனைப்

## காமத்தைத் தீதென்பார் நிலை

போத வெறிந்துபோய்(ப்) பூசனைக்குப் புற்பறித்து
மாதர்க் கணிசிகராய் வற்றிவறன் டெழுந்திட்

டூதப் பறப்பாரா யூணுறக்கங் கைவிட்டுத்
தாது கலங்கித் தலைபறித்துத் தம்முயிர்க்கு

நோதக்க செய்து பிறவுயிர்க்கு நொந்தனராய்
தீதுக் கிசையாத சித்தாந்தப் பித்தேறிச்

சாதிப்பாய்ப் பீலி தரிப்பாருந் தம்பசியின்
வாதை தவிர மனந்தரியாக் கஞ்சியினைப்

---

60. ஆதரவு - விருப்பம்.

65. போத - அழிய.

66. ஊண் - உணவு.

68. பீலி - மயிற்றோகை; தரித்தல் - அணிதல்;
வாதை - துன்பம்; தரியாத - சகிக்காத

போதுசெய வெண்ணிப் புதுமருதப் பூவெடுத்து
பீதக வாடையுடன் மூடிப் பேய்த்தனமாய்த்

தாதுகமே கல்லுகமே சாதுரிக மாலைகளின்
பேதகமே யென்று பிரகடங்க ளேபிதற்றிப்

போத முழுமரத்தின் பொந்திலே முத்தியினைச்
சாதிப்பார் தர்க்கித்து நிற்பாருந் தற்பரரா

யோதல் பொருள்கவர்த லோமத்தீ வேட்டலினை
யீத லெனவா மிருமுத் தொழில் பூணார்

வேதநூ லேணியாய் முன்னேற வண்ணாந்து
கூதிர்ப் பருவத்தே குந்திக் குதித்தோடிப்

பாதி யிரவே பனிக்கயத்துள் வீழ்ந்துசில
சாதிகள் போலவாருந் தலையோடும் வெள்ளெலும்பும்

பூதியும் வீழ்மயிருந் தாங்கிப் புதுச் சுடலை(ப்)
பாத மிரண்டும் படைத்து நடப்பனபோல்

---

69. பீதகம் - சந்தனம்.

70. பிரகடம் - பொய்.

71. பூணார் - மேற்கொள்ளார்.

73. கூதிர்ப்பருவம் - குளிர்காலம்.

74. கயம் - குளம்.

75. பூதி - சாம்பல்.

வீதி வெருவ வருவாரும் வெண்டுகிலைத்
தாதுகற் றோய்த்தேகத் தண்டிகளாய் முண்டித்து

வேதிய ரோடே விரோதித்து முத்தியாஞ்
சாதன மானந்த மென்றன்றோ தம்பகவ

ரோதி யுரைத்த வுரையெல்லாந் தொட்டகத்துக்
கீதையினுங் காட்டுவான் கீரிக் கடிகடித்து

வாதயுள் மெய்விடா வாரோர் தனமிரண்டு
மோதனமும் பலகறியு முன்னிட் டொருநாளில்

80. தோய்தயிரு நெய்யுந் தொலைப்பாரு மென்றுபல
பேதமாய் வெவ்வேறு பின்னித்த பாடண்டக்

காதறைகள் கட்டுரையை நன்றென்றெங் காமத்தைத்
தீதென்றுந் தீண்டினர்ச் செல்கதியொன்
றுண்டடென்றுந்

## உடலே ஆதாரம்

தாதகியின் மெல்லரும்புந் தண்கரும்பின் கட்டியுமிட்
டோதன மென்று மொருநான்கி லுற்பவித்த

76. வெருவ - அஞ்ச; துகில் - ஆடை; தாது - காவிக்கல்; முண்டித்து - மழித்து.

79. மோதனம் - உவகை.

81. காதறை - கெட்டது.

82. தாதகி - ஒரு மரம்; ஓதனம் - சோறு.

காதல் மதுவிற் களிப்புவெளிப் பட்டாப்போல்
மேதினியு மப்பும் விளைகன லுங் காற்றுமெனும்

பூதமொரு நான்கின் புணர்ச்சி விசேடத்தாற்
சாதனமா யுள்ள சரீரத்தி லேயுணர்வு

85. போது மெனவறியீர் புண்ணிய பாவங்கட்
கேதுவெனத் தோன்றுகின்ற திவ்வுடலே யிவ்வுடலுக்

காதியுமாய்த் தோன்றுகின்ற தவ்வுயிரே யவ்வுயிர்க்குச்
சேதனமா யுள்ள வசேதனமு மிவ்வுடம்பென்

றேதமறத் தெளியீ ரிவ்வுடலுக் கிவ்வுயிரே
யோது முயிர்மற்று முண்டோ வுண்டாகி

லேதுவினாற் காட்டீரோ விந்திரியங் கொண்டணரிச்
சோதிடங்கள் கேட்டன்று தாமத்தி னாலெருப்புண்

டாத லறிதலது போலவனு மானப்
பேதம் பிடித்துயிரைக் காட்டவோ பித்தேறி

90. யேதேனு மொன்றைப்பண் டெங்கெனுங் கண்டலுமே
யாதார மாக லனுமோனங் கொண்டன்றிப்

போதாதே காண்பான் பொருள்காண்பான்
போய்க்கண்டோ
வேதாக மத்தால் விகற்பத்தா லென்றவிவை

---

83. மேதினி - உலகம்; மப்பு - மேகம், நீர்.

86. சேதனம் - உணர்ச்சி; அசேதனம் - உணர்வின்மை.

87. ஏதம் - குற்றம்.

91. விகற்பம் - வேற்றுமை

சாதா ரணமாய்த் தடிப்பிணக்காய்த் தம்முளே
வாதாய் வசையாய் வழக்காட்டாய் மார்க்கங்க

ளோதாத தோதி யுளதென்ற தில்லையென்றென்
றோதாதே யேதம் மிட்டுரைப்ப தேகெடுவீர்

## விளக்கிருக்கத் தீத்தேடுவது போல!

போதாதி வையுங்கள் போய்கிடக்க மெய்கேளீர்
சாதலே வாக்குந் தவிராது வாணாளும்

95. பாதி யுலகத்தி லேகழியும் பாதியிலே
நோதல் பிணிமூப்பு நோக்கறுக்கு மிப்பிழப்புப்

போதுகொள வொண்ணாது பொன்பெறினு
மைம்பொறியின்
வேதனையை நீக்கி யதுவேண் டியது

மாதரும மென்று மட்வா ரிளமுலையைத்
தீதில் சுவர்க்க மெனவுந் தெளிந்துரைத்த

நாத னெனக்கியம்பு நம்பி யுயிர்க்குறுதி
யோதி யருளு முலகா யுதங்காட்டு

மேதுவினைக் கண்டி லிதம்கித மென்றுரையீ
ராதரும மொன்றுமறி யாத வரைப்போலப்

100. பேதையரைக் காணிற் பிணங்கிப் பிடித்தமுக்கி
மேதியினும் வெள்ளாட்டுப் பால்போது மின்றணியே

சோதி யுடைத்துச் சுடரொளியின் றாமத்திற்
சாதியி லன்றித் தழல்குளிருஞ் சந்தழலு

---

93. ஏதம் - குற்றம்.

மேதகு தேன்பிளிக்கு மென்கரும்பு கைக்குமிவை
யாதி யனாதிய காரண காரணமாம்

பேதவ பேதப்பிர மாணப்பிர மாணமெனும்
வாதடு மாற்றத்தால் வந்திலென வாராகில்

பேதைகான் வாணாளை வீணே கழித்தறவும்
பேதைப் பலசமயப் பெட்டாவாய்க் கட்டுரையால்

வேதிக்கப் பட்டு விளக்கிருக்கத் தீத்தேடிக்
காதற் கலவிக் கனியிருக்கக் காய்கவர்ந்து

## தவத்தால் பயனில்லை

சேதப் படுஞ்சிதட்டுத் திண்ணரகாள் முன்னீர்க்கு
நாதமு நாண்மலர்க்கு நாற்றமும் வெண்மதிக்குச்

சீதளமு முண்டாகச் செய்தாரார் செய்தவத்தால்
யாதும் பயனில்லை யெவ்வுயிர்க்கு மெய்ப்பொருட்கு

மாத லழித வியல்பன்றே வன்றாகிற்
காதலிக்கு மின்பமெல்லாங் கைவந் திடும்வகையே

வேதனையை நீக்கி விகற்பப் பெருந்தவமா
மோதப் பெருங்கடலின் மூழ்கீ ருழைமதியி

னாதவத்தே நல்லீர் கருவுடன் றண்பனிநீர்
மீது புகவீழ்ந்து மூழ்கீர் விரைக்களபச்

---

104. பெட்டு - பொய்.

109. மோதம் - மகிழ்ச்சி.

சீதவெள் ளத்தழுந்தீர் தென்றற் களிறேறீர்
வீதியிலே போய்ப்புகீர் மெல்லமளி மேலேறீர்

பாதஞ்செய் பூஞ்சரமாம் பஞ்சாங்க மத்திமத்தே
சேத முழவீர் கெடுவீ ரிவையித்தின்

பாதியு மொவ்வாது பாழ்வருத்த மவ்வருத்த
மேதேனு மின்பம் விளைப்பிக்கு மெங்களுக்கு

மாதெய்வ மான மதனா கமத்திலே
பேதையர் தோள்சேரப் பெறாதார் பெறுமளவு

115. மாதி மயிர்கெட் டடையச் சடைபுனைந்து
பூதி யுடலடையப் பூசியு மென்பணிந்துஞ்

சேதக மாசேறத் திரிந்துங் குளிர்மறந்தும்
பாதியு மாதியுமாய்ப் பஞ்சேந் திரியங்கள்

யாதேனு மோடாதா யேகாந்தச் சித்தராய்
ஓதனமுந் தண்ணீரு முண்ணா துறங்காது

மாதவமேற் கொண்டு மனக்கருத்து முற்றுகவென்
றோதிய மார்க்கமொன் றுண்டதனை யுற்றுணர்ந்து

சாதனைகள் செய்தலுமே சன்னதியாய்த் தம்மடியோம்
பேதைமையாற் செய்யும் பிழைபொறுத்து முத்திகளி

---

111. அமளி - படுக்கை.

115. என்பு - எலும்பு

116. சேதகம் - சேறு; பஞ்சேந்திரியங்கள் - ஐம்பொறிகள்.

117. ஓதனம் - உணவு; ஏகாந்தம் - தனிமை.

120. னேதுமக்கு வேண்டுவதென் றிப்பிறப்பி லேயின்பம்
போத வருள்சுரத்தல் காணீர் நும் பொய்த்தவத்தாற்

## பொறியற்ற சமணர்

சாதனைகள் செய்யுஞ் சமணீர்நும் முத்தியோர்
போதுறைவ துண்டோ பொறியற்றீர் போமறியீ

ரோதப்புக் குள்ள மதியுங்கெட் டும்முள்ளே
சோதித்து முட்டறுத்துச் சுத்த வெறுவெளியென்

றோதிய முத்தி யிருக்குமூ ரும்மூர்க்குக்
காதமோ காதரையோ கண்டாரார்? கேட்டாரார்?

மூதலிக்க வல்லீரேற் சொல்வீர் நும் முத்திக்கு
நாதனார் நாமறியா நாதரோ நீர்நடுவே

125. மாதாபி தாவேண்டா வாய்விட்டா ரிட்டழைத்து
வோதார் குழல்தாவென் றோடாதே பாஷண்ட

வேதான வேடத்தை விட்டெறிந்தே சட்டராய்
நாதா மதனா நமோநமோ வோமென்று

தூயதாக நீராடித் தோத்தினா ரைத்தோத்திக்
கோதாரு மின்சொற் குதலைக் கிளிமொழி

---

121. உறைவதுண்டோ - இருப்பதுண்டோ.

122. முட்டு - தடை; ஓதல் புக்குள்ள - படிப்பினால் ஆகும்.

124. மூதலிக்க - நிரூபிக்க; நாதன் - கடவுள்.

125. பாசண்டம் - சமயக் கட்டு.

127. குதலை - இனிய மொழி.

பாதார விந்தத்தே வீழ்ந்து பழவடியே
னூதாரி யாகாமற் காத்தருள் ரொண்கனிவாய்

சேதார முண்ணத் திருமுகந் தாருமென்
றேதேனு மொன்றை யிரந்திளகி யெங்களினு

130. மேதா விகளாக மேம்பட்டீர் நானுமக்குத்
தீதாகச் சொன்னேனோ செத்தீர் நும் புத்திக்கே

மூதேவி யாய்ப்பிறந்து முத்திப்பேய் தாக்கப்போய்ப்
பாதான மான படுகுழியில் வீழ்வோருக்

காதார மாக வதேகெதியொன் றோதுவேன்
வாதாரி யேகெடுவீர் மன்மதன் பண்டார

வாதாளி போக வமண்சா தனைப்பட்டுக்
கோதாரி செய்து குடிகெட்டா னானுமக்குச்

சேதார மிட்டிருக்க வேணுமோ திண்ணரகா
ளேதாதி யாக விலையுரைத்தீ ரென்னெதிரே

---

128. ஒண்கனிவாய் - அழகிய இனிய வாய்;
பழவடியேன் - பரமபக்தன்.

132. வாதாரியே - பேச்சு மூலமாகவே.

133. ஆதாளி - வீம்பு பேசல்; கோதாரி - பயனற்ற செயல் செய்து.

## வானத்திலிருந்து வந்தவரா நாம்?

135. மாதர் உதரத்தில் வந்திலோம் வானின்றுந்
தாதையு மின்றித் தனித்தனியே யாமெல்லாம்

பூதலத்தே போத விழுந்தோ மெனவொருவர்
சாதிக்க வல்லீரோ? சொல்லீர்! தடுப்பரிய

வாதரவுண் டேனு மனங்கவே ளாணையே
பேதையர் தங்கொங்கை பிடித்தாள்வர் பின்னையான்

போதுவ தாகின்றேன் புணையிடுவேன் போம்போகீ
ரேதென் றிருந்தீ ரிவைகிடக்க யாம்புகழு

நீதி நிலவை நியாய மனோபவனைச்
சாதுரிய வெற்பைத் தமிழ்நாட னைத்தமிழின்

140. மாதுரியம் போலு மலைப்பவர்தங் கேசரியைப்
பூதல கற்பகத்தைப் போல்வீ ரெனப்புகழ்ந்திட்

டேதிலரைப் பின்சென் றிரப்பதுவும் யாவரையுங்
காதை காட்பாதல் கரந்துரைப் பாட்டாதல்

---

135. உதரம் - வயிறு; தாதை - தந்தை.

136. பூதலம் - பூமி.

137. அனங்கவேள் - மன்மதன்

139. வெற்பு - மலை.

140. கேசரி - சிங்கம்; பூதலம் - பூமி.

141. ஏதிலர் - வறிஞர்.

பாத மயக்கத்தால் பாடுவதும் பஞ்சத்தைத்
தேதெனா வென்றெடுத்துச் செஞ்சுருதி யொத்திருப்பச்

சாதுரி வைப்பதுவுந் தாளவி தானத்தின்
பேத மறியாதே பித்தரென வொத்திருப்பப்

பாத வியோகம் பண்ணுவார் பண்ணாதே
ஆதவன் கீழ்க்கா லுதித்தக்கா லாண்பெறுதி

145. பீதகனோக் குண்டு பெறுவாரும் பெண்ணென்று
சோதிடங்கள் மெய்போலச் சொல்லுவதுஞ்
சொல்லுவார்

மாதுலரைச் சோதித்த தவரைப் பெறாதொழியிற்
றீதிலதாய் வாழுந் திடகடின காயத்தை

யூதி யிருந்த துடம்பென் றொறுத்துமக்கு
மேதகவே காடேலா மெய்யே மருந்தென்று

---

142. பஞ்சம் - பஞ்சமாசத்தக்கருவிகள். அவை, தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி.
தேதெனாவென்று - இசைக்குறிப்பு.
சுருதி - இசையைச் சிறப்பிக்க அதனுடன் ஒத்தெழுப்பப் படும் துணையொலி.

143. சாதுரி - சாதிரை - ஊர்வலம்.

145. பீதகம் - பொன்.

146. காயம் - உடல்.

147. ஒறுத்து - கடிந்து.

வேதாக வொன்றையிட் டிரண்டொன்றாய் வெந்தநீர்
கோது படாமல் வடித்துக் குடிப்பித்து

வேதனைநோய் செய்தவரை வீழ்த்துவது மேதினிக்கு
வாதனை யொத்த மனோசிலையே வங்கமே

150. பாதரச மேயுங்கள் பாவமே யென்றேத்தி
மேதகவே காட்டலாம் வேண்டலிது வேண்டுமிது

மாதிக மேமனைவி மங்கல சூத்திரமே
காதி லிடுவனவே கல்யாண மென்றிரவி

வேதிலரை வேண்டித்தா னீண்டி(க்) கொணர்கென்று
சூதமொடு பொன்னெலாந் தூமகெதி போனதேன்?

மாதரார்க்கன்றி வேறு யாருக்கு?

ஊதுகுகை மாற்றி யுணர்வுடையோர் தங்களையும்
வாதமெனும் பித்தால் மயக்குவதும் வார்மதத்த

போதகத்தின் போதகத்தி பொய்பொய்
யெனப்புரண்டு
வீதியிற்கொண் டோடுவதும் வேட்டி விருதங்க

---

149. மேதினி – உலகம்; மனோசிலை – நஞ்சு.

151. மாதிகம் – பெண்ணுலகம்.

152. சூதம் – சூது; தூமம் – புகை.

153. ஊது – துளைத்தல்.
வார்மதம் – உயர்ந்த மதம்;

154. போதகம் – யானை; வேட்டி – ஆடை; விருது – பட்டம்.

155. மாதி யுரையறிந்து கட்டுவதுங் கட்டப்பட்
டோதுவது மேற்கொண் டுழுவதுவு மூதண்டம்

போதுவதும் வாணிபங்கள் செய்வதுவுந் தீவுதொறும்
பாதைபடந் தோட்டுவதும் பாம்புபிடித் தாட்டுவதுஞ்

சூது பொருவது தூய்தர கம்முதலாஞ்
சாதனைசா திப்பதுவுஞ் சம்பிரதங் காட்டுவதுந்

தீது முயன் று சிறைதனிற் சங்கிலியில்
வாதைப் படுவதுவு மற்றுங் கொலைகளவும்

பாதங்கள் செய்து படாக்கட்டம் பட்டோடி
வாதனைகள் செய்வது மெல்லா மவற்றினால்

160. போதுவது போலப் பொருளீட்டிப் பொருளால்
மாதரார் கொங்கை வடுப்படுதற் கன்றாயிற்

பூதைகான் புற்சரங்கள் பட்டுருவும் புண்வாயில்
வேதுகொள வேவெதுப்பிக் கட்டவோ? வட்டகைமே

லோதன பிண்டத் துடனேற வைக்கவோ?
மூதறி வாளரே கேளீர் முதலில்லார்க்

---

155. மூதண்டம் - பழையலோகம்.

156. போதுதல் - பகுக்கப்படுதல்.

159. படாக்கட்டம் - படாத துன்பம்.

161. பூதை - பூதி - புழுதி.

## இன்பக் கடல் மூழ்குவதற்கே

கூதிய மில்லையென் றோதி யுடல்வருந்திக்
காதம் பலகடந்து கங்கையுங் காவிரியுங்

கோதா விரியுங் குமரியுஞ்சென் றாடுவார்
சேது தெரிசனங்கள் பண்ணுவார்செம் பொன்னோடு

165. பூதான கோதான முள்ளிட்ட பூசுரர்க்கு
மாதானஞ் செய்வார் மனுநூல் மறைநூலர்

நீதி நெறிமுறையி னெய்சொரிந்து தீவேட்டு
வேத முதல்வேள்வி விளைப்பார் விளைப்பதெல்லாம்

மாதரங்க வேலை வலைய முழுதாண்டு
சீதள வெண்குடைக்கீழ்ச் செங்கோ லினிதோச்சிப்

பாதமணி நித்திலத்துப் பைம்பொற் பளிக்கறையில்
வேதிகை வெள்ளி விதானத்தி னித்திலத்திற்

பாத நிலைப்பளிங்கிற் றூணிற் பவளத்துப்
போதிகை வைத்த புதுவயிர வுத்திரத்து

---

165. பூதானம் - நிலத்தானம்; கோதானம் - பசுத்தானம்; பூசுரர் - அந்தணர்; மறை நூலர் - வேத நூல் வல்லார்.

167. தரங்கம் - அலை; வேலை - கடல்; சீதளம் - குளிர்ச்சி; வலையம் - வலயம் - எல்லை.

168. பளிக்கறை - பளிங்கு மண்டபம்; நித்திலம் - முத்து.

169. போதிகை - சுமையடைக்கட்டை

170. வாதால மிட்ட மரகதத்து மாணிக்கச்
சோதி படைத்த துலாத்து நிலாத்திகழ்கோ

மேதகத்து நித்திலத்து மிக்குயர்ந்த மாளிகைமேல்
மோதிர தாமத்து முத்து விதானத்துச்

சீதாரி தூபந் திசைவரந்து கந்திப்ப
வேதாஞ்செய் தீங்கலவை விம்மி விரைகம(ழு)ஞ்

சாதி மலர்கலந்த சந்தனப்பூந் தாமத்து
மா துரிக வாச முகவாச மென்றின்பச்

சா துரிக வேட்கையினைத் தானே கடைக்கூட்டப்
போதகத்தின் வெண்மருப்பின் பொற்கால்
மணிக்கட்டில்

175. மீதெடுத்த பஞ்ச சயனத்தின் மீதேறிம்
மோத முலவு மொருபாற் கடல்கிடந்த

---

170. வாதாலம் - மீன்.

171. தாமம் - ஒளி; விதானம் - தொகுதி.

172. சீதாரி - சாம்பிராணி; தூபம் - புகை;
கந்திப்ப - மணக்க.

173. மா துரிக வாசம் - இனிய மணம்

174. போதகம் - யானை; வெண்மருப்பு - தந்தம்.

175. ஓதம் - கடல் அலை

சீதரனுஞ் செய்ய திருமகளும் போலத்தங்
காதல் மகளி ருடனிருந்து கைவைத்துச்

சாதாரி நல்யாழின் றந்திரங்க ளாற்சமைந்த
(கோ)தாரி காமா வெனுமளவிற் காமனுந்தன்

போதின் புதுவாளி கோத்துப் புதுக்கரும்பின்
கோதண்டம் வாங்கக் கொடும்போர் தொடங்குதற்குப்

பாதி வழிபுகுந்தா னென்று பசந்தென்றல்
தூதுவரும் தண்ணறுந் துந்துமிபோல் வண்டார்ப்ப

180. மாதர் முலைத்த வாரணமேற் றோன்றுவகண்
டோத மெனப்பொங்கி யோடும் பெருவெள்ளத்

---

176. சீதரன் - திருமால்.

177. சாதாரி - ஒருவகைப் பண். முல்லை நிலத்து இராகம்.
கோதாரி - மேன்மையுடையோன்.

178. வாளி - அம்பு; கோதண்டம் - வில்.

179. துந்துமி - பேரிகை

180. மத்தவாரணம் - மதயானை; ஓதம் - கடல்

தாதரவு கைமிக அதிமோக வேகத்தால்
மாதிமையை விட்டெறிந்து மத்தப் பிரமத்தரா

யேது மறியா தெதிரெழுந்து மேல்வீழுந்திட்
டேத நுடங்கும் மருங்கு லொசிந்தசையச்

சூதனைய கொங்கை முகங்குழை யத்தழுவித்
தூதனை தொண்டை யிரண்டையும் வென்றகமும்

போதவு மிழந்து புரண்டதர மிளக
கோதை பரிந்து விரிந்தனகங் கள்குலைந்

185. தோதி சரிந்து முறிந்து கரும்புருவம்
பாதி வளைந்தி மிர்த்து பரந்திருகண்

காதளவும் பரவக் கைவளை பூசலிடப்
பாத சலங்கைகளின் பந்தி சலஞ்சலெனச்

சோதி மணிக்குழையுந் தும்பியும் மாடவிழுந்
தோத வலம்புரிமுத் தூசலிட நாடகச்

---

181. ஆதரவு - விருப்பம்; மாதிமை - காதல்; மத்தம் - களிப்பு;
பிரமத்தம் - வெறி

182. நுடங்கும் - அசையும்; மருங்குல் - இடை;
ஒசிந்து - துவண்டு

184. அளகம் - கூந்தல்.

185. ஓதி - கூந்தல்

186. பூசலிடல் - ஒலித்தல்; பந்தி - வரிசை, ஒழுங்கு;

187. நாடக - அகம் நாடும்.

சீத மணித்தாமத் திங்கள் வியாபித்துத்
தேதில ரொப்பமுனிந் தின்ன தெனத்தெரியா

மா து ரியக்குதலைச் செஞ்சொல் மிழற்றவருஞ்
சா து ரியக்கலவிச் சாகர முழுகுவதற்

190. காதரவின் மோகத்தா லன்றோ வறுசமைய
வாதத்தைத் தீர்க்கு மருந்தறியா தேமடவார்

சூதுமொத்த கொங்கைத் துறைமறைய நயப்புண்டு
சேதப் படுவோன் கெடுகுடியில் வாமையினா

னோதக் கடலி னடுவே திடர்தோன்றிப்
போதப் பிரான்செய்த புண்ணியத்தை
யென்சொல்கேன்?

---

188. சீத - குளிர்ந்த; தாமம் - ஒளி

189. குதலை - பெண்ணின் இனிய மொழி; மிழற்றுதல் - கொஞ்சுதல்; கலவி - காமநுகர்ச்சி; சாகரம் - கடல்.

190. அறுசமயம் - சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம் எனும் ஆறு சமயங்கள்; மடவார் - பெண்கள்.

191. துறை - இடம்; நயப்புண்டு - இன்புற்று; சேதம் - துன்பம்

192. திடர் - திட்டு

# ஆதிநாதன் புகழ்

சேதாவின் வெண்டீம்பால் செங்கமலப் பைந்தோட்டுப்
போதாங் கரும்பு னல்சூழ்ந்த நன்னாட்டு

மாதீப மானதொறு மூதூர் மதுரையென்று
மூதா ரிரண்டுடையோன் முத்தமிழ்ப்பா நான்கினுக்கு

195. மாதார மேன்மை யவதார செம்மனோர்
மாதா ரகமா மனுநூல் மறைநூலென்

றோதா துணர்வோ னுலகி னுக்கு
மாதர விரப்போ ரிரப்பிடும்பை தீர்த்தருளுந்

தாதாவே கைக்குதவி தாதாவித் தாரணியில்
வேதகஞ்செய் வெங்கலியின் வெம்மைந் துணாதருஞ்

---

193. சேதா-சிவலைப் பசு; தீம்பால் - சுவைமிகு பால்;
தோடு- இலை; போது- பூ புனல் - ஆறு

194. மூதூர் - பழமையான ஊர்; முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற மூன்று; பா நான்கு - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு பாக்கள்.

195. மாது- பெருமை; அகம் - அகநானூறு

196. இடும்பை - துன்பம்

197. தாதா- ஈகையாளன்; கை-கைப்பொருள்;
தாரணி - உலகு; வேதகம் - பகைமை; கலி -போர்;
உணா- உணவு.

*சீத்துங்கன் மேகத் தியாகதுங்கன் செல்வி தருந்*
*தாதகியின் பூந்தொங்கத் தங்கோன் புலிகெங்கை*

*சேதுபரி யந்தஞ் செலுத்துதற்குத் தான்செல்லுஞ்*
*சாதரங்கஞ் சூழ்ந்த தனிப்புரவி மீதேறிச்*

200. *சோதி நெடுவா ளுறைகழித்துத் தோளாத்*
*தீதில் வடமலைப்பால் தென்மாரு வர்முனையில்*

*மாதண்டு சூல மழுவா ளெழுநேமி*
*கோதண்ட முட்கரங் கூர்வேல் குலிசமுடன்*

*யேதில் பலவு மிகல சேய*
*வோதி யலதி குலைதி படல*

*பாதி யிவுளி புரள மதகரி*
*யாதி யுடல்கள் துணிய வழிபடு*

*சோதி வயிர துரகம் நின்ற*
*கேத மெரிய முறிய வெறிபடை*

---

198. *துங்கன் - மேன்மையுடையோன்; செல்வி - அழகு, தாதகி - ஆத்திமரம்; தொங்கல்-பூமாலை*

199. *புரவி - குதிரை; சாதரங்கம் - பதுமராகம்;*

201. *குலிசம் - வச்சிராயுதம்*

202. *ஓதி-போர், இகல - பொருத; அலதிகுலதி - அலங்கோலம்; படக- சாக.*

203. *இவுளி - குதிரை; துணிய- வெட்டுப்பட*

204. *துரகம் - குதிரை; கேதம் - வீடு.*

205. பூத பதிக ளிருவ ரொருநெறி
போத லொழிய வொழுகு குருதியி

னோதை குமிழி யுமிழ வொருபது
நாத விருதர் தசையின் மினசதரு(ம்)

மோது முரக நிறைசெய் துவசமு
மூது பிணமு நிணமு மிவைமுத

லாதி யலைய மலைய வரசர்கள்
பூதி முழுதுய்யப் போந்து பொருகளத்துச்

சாதகமும் பாருந் தசையருந்துஞ் செம்பருந்துக்
பூத பிசாகம் புலாவின் சுவைவெளுப்ப

210. மாதிரங்க ளெட்டும் வடுப்படுத்து வகை நாறும்
போது புரிந்த புருடகண் டீரவப்போர்

---

205. பதிகள் - அரசர்; குருதி - இரத்தம்.

206. ஓதை - ஒலி; விருதர் - படைவீரர்.

207. உரகம் - பாம்பு; துவசம் - கொடி.

208. மலைய - சண்டைசெய்ய; பொருகளம் - போர்க்களம்.

209. சாதகம் - பூதம்; பார் - தீ.

210. மாதிரம் - திசை; வாகை வறும் என்று ஓலையிற் காணப்படும்;
கண்டீரவம் - சிங்கம்.

சாது சன்மதன் சங்கிராம சந்தோஷன்
போது சன்மதனன் புண்டரிக மாத்தாண்டன்

சீத களப திலகமுக வேலையன்
சாதிக் குச்சீ கருண சன்மார்க்கன்

வேத சரிதன் பைபரி நகுலன்
மாதுங் கன்மன துங்கவல் லபனெங்

கேதங் கெடுக்கும் கிரிதுரங்க னெட்டூர
வீதி விநோத விபுண துங்கன் வித்தகனெங்

215. காதலால் யாம்புகழுங் காரானை வாழ்வேந்து
ஆதினா தன்ற(ன்) னருள்போற் குளிர்ந்துலகில்

---

211. சாது - நற்குணத்தோன்; சன்மதன் - தலைவன், அரசன், சங்கிராமம் - போர்.

212. சீதம் - குளிர்ந்த; களபம் - கலவைச் சாந்து; சீ - ஒளி; சன்மார்க்கன் - நன்னெறியோன்.

213. சரிதன் - செயலிற் சிறந்தவன்; பை - மேன்மை; பரி - மிகுந்த; நகுலன் - அறிஞன்; துங்கன் - மேன்மையுடையவன்;

214. கேதம் - துன்பம், கிரிதுரங்கன் - மலையனைய திண்ணிய நெஞ்சன்

215. காரானை - மேகம்; ஆதிநாதன் என்பதன்முன் காதல் எனும் ஒரு சொல் ஓலையில் மிகையாக உளது.

# வியப்புத்தரும் பெண்ணழகு

மாதர் முலைத்துகில்போல் வந்தலைக்கும் வைகைநீர்
மோதி மதகிடரி மூரிக் கரைமருங்கின்

கேதகை மல்லிகை கிஞ்சுக மஞ்சரி
மாதவி வல்லரி சண்பக மாலதி

பாதிரி புன்னை பராரை மரா(ம்)மகிழ்
சீதள மௌவல் செருந்தி நரந்தகில்

மாதனை முல்லை வருக்கைப் பருங்கனி
சூத கரந்தை சுகந்த நிறைந்தன

220. சாதி நெருங்கிய சந்தன நந்தோ
வீதி புகுந்த விளையாடு மின்னோவென்

---

216. மூரி - நெரித்து; மருங்கு - பக்கம்.

217. கேதகை-தாழை; கிஞ்சுகம்-பலாசமரத்தின் பூ; மஞ்சரி-பூங்கொத்து; வல்லரி - கொடி; மாலதி-முல்லை.

218. பராரை- பருத்த அடி; மராம்-வெண்கடம்பு;
மகிழ்- மகிழம்பூ; சீதளம்-குளிர்; மௌவல் - வன மல்லிகை; செருந்தி- ஒரு மரம்; நரந்தகில் - வாசனை யுள்ள அகில்.

219. மாதனை- ஒரு மரம்; வருக்கைக்கனி - பலாப்பழம்
சூதம்- பவளமல்லிகை;
சுகந்தம் -மணம்;

220. நந்து- சங்கு

காதல் விளைக்கின்ற காமமோ காமத்தின்
சேதோ மயமோ திருவோ திருவினுக்கு

மாதோ வனங்கனுக்கு வாழ்வோ மதுரத்தின்
மேதோ வுலகின் விளைவோ விளைவிலா

யாதோ விமையவர்க ளின்னமுதோ வவ்வமுதின்
கோதோ முலைபடைக் கூற்றோ வெனவொருவா

பாதார விந்தப் பரிபுரத்தோ டல்லாது
போதாத செய்தளிர்கள் செங்கனிப் பொங்கொளிவன்

225. றுதாத மென்காந்த ளோரிரண்டோ நொய்யவரைத்
தாதோ தளிரோ மலரோதண் டாமரையின்

போதோ முகமோ வியர்த்த புருவமோ
மீதோ வளைசிலையோ மேல்வளை வெவ்விடத்திற்

---

221. சேது - பாலம்

222. மாது- பெருமை; அனங்கன் - மன்மதன்; மேது - அறிவு.

223. இமையவர் - வானவர்; ஒருவா - நீங்காது

224. பரிபுரம் - காற்சிலம்பு; போதாத - நீங்காத;
செய் - சிவப்பு.

225. ஊதாத - துளைக்கப்படாத; நொய் - மென்மையான;
தாது - பூந்தாது.

226. போது - பூ; சிலை - வில்.

நீதோ விழியோ திறைகொள்ள வல்லைபொரும்
காதோ கணைப்பொற் குழைசிவப்பமக் காமனார்

தூதோ நகையோ துணைசெய்யாச் செய்யவாய்ச்
சேதோ கவரிதழோ வாம்பலோ தேன்பிலிற்றுஞ்

சூதோ முலையோ துணைக்குரும்பை யோசுமந்து
போதா தெனுமிடையோ போய்நுடங்கும் வஞ்சியோ

## காமன் கணை

யாதோ வெனதுயிரோ வென்றுரைக்க நின்றார்தம்
பாதத்தை யோராது பார்த்தேனைப் பார்த்தனங்கன்

கொதித்தெழுந்து கொடுஞ்சிலையை நாணேற்றித்
தாதொக்க வீழ்ந்து தழலொக்கு மைந்தன்பா

லாதக்க வொண்ணாதே யையா யிரமாகப்
போதத் தொடுத்தெய்து புங்கானு புங்கமுற

227. திறைகொள்ளுதல் - வெல்லுதல்; வல்லை - வலிமை;
பொரும் - சண்டைசெய்யும்.

228. பிலிற்றும் - கொப்பளிக்கும்

229. வஞ்சி - கொடி

230. ஓர்தல் - தெளிதல்

232. புங்கானு புங்கமுற - அம்பின் பின் அம்பு தொடர்தல்.

வாதித் தலுமே பதைபதைத்திட் டாலாலம்
வேதிக்க வீழ்வார்போல் வீழ்ந்தேனை வில்லாலே

மோதப் புகுமளவில் முன்னமே யென்னுயிர்க்குப்
பாதுகாப் பாகப் பரிவித்துச் சேமித்த

235. மாதர் முகசந்திர மண்டலத்து வந்திழியுஞ்
சீத வமுதத் தியானத்தி னாற்றெளிந்து

சாத லரிதற் பிழைத்துத் தரித்தவுயிர்
பாதியு நானு மெழுந்திருந்து பன்மணிக்குச்

சோதி கொடுக்கு முருவுடையீர் தொல்கமலப்
போது வரிதாகப் பொன்னுலகம் புல்லெனவிங்

## காதலாற் கட்டுண்ட யான் உய்யும் வழி யாது?

கேது கருதி யெழுந்தருளிற் றென்னுயிரு
மேதினியும் வாழ்விக்க வேண்டியோ வெவ்வினையேன்

காதற் றனிநெஞ்சங் கட்டியது வட்டமுலை
மீதிட்ட வாரிட்டோ? மேகலையிட் டோபுருவச்

---

233. வாதித்தல் - வருந்தல்; ஆலாலம் - விடம்;
வேதித்தல் - பிளத்தல்; நலிவடையச் செய்தல்

236. தரித்தல் - தாங்குதல்

236. புல்லுதல் - தழுவுதல்

237. மேதினி - உலகம்

சாதிக் கொடியிட்டோ? சாத்தும் வடமிட்டோ?
யாதிட்டோ! வாய்விட் டருளிச்செய் தென்மனத்தைப்

போதிட் டருளாளும் பொற்கலைசூ லல்குலுக்கு
மேதக்க கொங்கைக்கு மேங்குற்றேன் வல்லபடி

பாதத் தினுக்கும் பணிசெய்வதல் லான்மற்றி
யா துக்கு மாகே னிகழாதே யின்றென்னைச்

சா துக்க நீக்கித் தனமே தனமாகக்
காதிற் சுருளோலை யோலையாய்க் கண்ணம்பால்

(பு)ாதித்த வாறெழுதிக் கொள்ளீர் வழிவழியென்
றோ துவர்க்கஞ் செய்து தளிர்மெல் லடிசுமந்து

பாதங் கழுவிப் பரிகலத்து வைத்ததுவுண்
டாதரித்த வன்னிழல்போ லப்போதைக் கப்போது

யாதருளிச் செய்தீ ரதுசெய்வேன் யானுய்ந்தாற்
சேதமுமக் குண்டோ திருவாய் மலர்ந்தருளிப்

போதுமெனச் சொல்லிப் புகவீழ்ந்து கும்(பி)டலு
மேதில்பேர் னோக்கா விரங்காச் சிறுங்கணியாச்

சோதி நுதல்வியராச் சொல்லுவதொன்
றுள்ளதுபோய்
வா துடியா விம்மா மறவா மூறுவலியா

---

240. பொற்கலை - பொன்னாடை

242. தனம்-கொங்கை; தனம்-செல்வம்

247. நுதல்-நெற்றி 'வா துடியா' ஓலையில் வாய்துடியா என உள்ளது.

வாதுக்க ணோடே வழக்காடா நாப்பரியாக்
கோதையு மென்மனமுஞ் சோரக் குழல்மீதே

கேதகைவண் டும்மகிழ வந்தரற்றக் கேட்டேனென்
காதலு நூபுரமுங் காறொடாக் கையகன்ற

250. மாதவிப் பூம்பந்தர் மறைந்தால் மறைதலுமே
யேதோவென் றெண்ணியா னிந்ரபதம் பெற்றிழந்து

போதுறுவார் தம்மைப்போற் போயேகு முன்றிமிரத்
தாதுவாத மாதி யலைந்தலைப்பட் டாவிதளர்ந்

தோதுவித்து வெவ்வுயிர்கொண் டுள்ளழிந்து தள்ளாடி
மாதுயரப் பட்டு மரமேறிக் கைவிட்டுப்

பேதைமையே னேறுகின்ற பித்தத்தில் மத்தேறிச்
சீதப் பசுங்கதலிச் செங்குருத்திற் செங்கழுநீர்த்

தாதப் படுத்து தளிபடுக்குந் தண்குளிரின்
மீதிட்ட வெப்பத்தீ மீதே விறகிட்டு

255. மூதக் கொடுப்பானுக் கொக்கத் தவிசின்மேல்
வேதித்த தண்களப மேல்மெழுகாத் தீமெழுகா

---

249. கேதகை - தாழை; நூபுரம்-காற்சிலம்பு.

250. பதம்-பதவி.

251. தாதுவாதம் - கலைஞானம் அறுபத்துநான்கில் ஒன்று.

254. தளி - குளிர்.

255. ஒக்கத் தவிசு - கொதிக்கும் பாதரசம்

வாதைப்பட் டேனை மறுகூடு கூடிடவே
யூதையுட னியங்க வுள்ள முடன்றயல்க

வாதரவு வெள்ளத்தே பள்ளற் சுழியழிந்து
...... ....... ....... ......

## மடல் ஊர்வேன்

258. போது நெறியறியாத் தாழ்ந்தோனன் புண்ணியத்தால்
மூதுணர்ந்த வள்ளுவனார் முப்பாலிற் பிற்பாலோன்

ஓதிய காம முழந்து வருந்தினாற்
கேது மடலல்ல தில்லைவலி யென்றா

260. ராதலால் யானு மதனையே மேற்கொண்டு
மாதரார் செய்திட்ட வல்லபத்தைத் தீர்மனக்

கேதத்தை விட்டுக் கிழியின்மேற் கேசாதி
பாதத்தை யெல்லா மெழுதினேன் பண்டேதென்

நூதப் பறக்கு முடற்குப் பொடிபெருகச்
சாதப் படவேநான் தேடிவைத்த வப்பொடியைப்

போதப் பொலியத் தடவலாம் பூளையுமென்
கோதைப் புதுமலருங் கொத்துடைய வெள்ளெருக்குஞ்

257. அள்ளல் - நெருக்கம்; சுழி - விந்து

258. உழத்தல் - புரளல்.

262. சாதப்பட - தூய்மையாக;
போத - போதுமான அளவு.

சோதிக்க வைத்தானே தோழனொரு மாவிரதி
காதுக்குங் கைக்குங் கழுத்துக்குங் கட்டுவன்

265. வேதித் தவன்சொன்ன வெள்ளெலும்பி னாபரணம்
போதித்த போதே பெறலாம் துரைநகர்

காதற் புறஞ்சூழ் கரும்பெண்ணை மாமடலைப்
போதக் கொணர்ந்து புரவியாய்ச் சேர்த்ததனைச்

சாதிப் புரவி யிதுவென்னத் தாரணியோ
ரீதுக் கிவனா மினிநகுல னென்றுரைப்பக்

காதனோய் செய்தாரைக் காமத்திற் காண்பளவும்
யாதனா வேட மிதுவென்ன வித்தெருவே

வீதி வரயேறி வேள்கண்ட வூர்தோறு
மாதியா யூர்வேன் மடல்.

ஏறுவே னாளை யிவன்கு லனெனவே
மாறிலாச் சீர்கருணை மாண்பான் - சீறி
யதிரப் பொரும்யானை யாதிநா தன்றன்
மதுரைப் புறஞ்சூழ் மடல்.

---

265. பெண்ணை - பனை.

266. புரவி - குதிரை; தாரணி - உலகு

பாப்பைய பிள்ளை
உலா மடல்

## கடவுள் வாழ்த்து

வேக மாநெறி சேரும் வினைகளுந்
தாக போகம் விடாத தளர்ச்சியுஞ்
சோக வாரி யினால்வரு துன்பமும்
போக வானை முகத்தனைப் போற்றுவாம்

## தேவி சகாயம்

பாராளு மம்பைநகரப் பாப்பையபூ பாலன்மே
லாராய்ந் துலாமடலன் பாயுரைக்கத் - தாராருஞ்
சித்தந்தி வண்ணனருள் சித்திவேழத் தைநெஞ்சே
நித்தந் தியானஞ்செய் நீ

---

போகம் - இன்பம்; வாதி - கடல்;
ஆனை முகத்தன் - விநாயகன்.
பூபாலன் - மன்னன்;
தாராரும் - மாலையணிந்த;

# பெண்ணமுதின் சிறப்பு

1. மணிகொண்ட வாவிதிகழ் மாமதுரை வாழும்
பணிகொண்ட வேணிப் பரனும் - அணிகொண்ட

சீதரனு நான்முகனுந் தேவேந் திரனுமுகிற்
கோதையிர திக்குரிய கோமானு - மாதவளத்

திங்களுமோ ராழியந்தேர்ச் செங்கதிருந் திண்டிறலார்
புங்கவரு மேலாந்த போதனரும் - வங்கமிகு

காராழி ஞாலமுமெக் காலமுநீங் காமலுளப்
பேராசை கொள்ளவந்த பெண்ணமுதஞ் - சீராக

5. வப்பயக் கடற்களங்கத் தம்புலியோ டும்பிறவாச்
செப்பமுளச் செல்வத் திருமடந்தை - யொப்பிலுளத்

தன்னாள் பிறர்மனைக்கே யாசைவைத்த விந்திரனுக்
கென்னாளுங் கிட்டாத விந்திராணி - முன்னாகக்

கட்டழகா நன்னுதற்கண் கண்டகாற் றோர்மதனுக்
கிட்டமுட னெய்தா வெழிலி .. - மட்டிலாப்

---

1. வாவி - குளம்; பணி - பாம்பு; வேணி - சடை

2. முகில் - மேகம்

3. ஆழியன் - திருமால்; புங்கவர் - வானோர்; தேவர்.

6. இந்திரன் அகலிகையைக் கூடிய கதை இங்கு சுட்டப் பெறுகிறது.

பித்தனைப்பே யோடாடும் பிஞ்ஞகனைச் சேராத
முத்து நகைமுகமா மோகினிப்பெண் - மெத்தக்

குறுமுனிவ னுண்ட குரைகட லிற்றோன் றுஞ்
சிறுமை யிலாதசெழுந் திங்கள் - மறுவிலா

10. வின்னிலத்திற் பூசையைக்கண் டேயிடரெய்
தாப்பயிற் றும்
சொன்னயம தாய்ச்சொற் சுகக்கிள்ளை -
மன்னுமன்பாய்

வேதனையே மேவாமல் மேதினியின் மேன்மேலு
மாதயவாய்ச் சஞ்சரித்து வாழுமன - மோதரிய

வம்புவியிற் கோம்பிதனக் கஞ்சிடாக் குன்றாராப்
பைம்புயலைக் கண்டாடாப் பச்சைமயி - லும்பவிருள்

மன்மதன்கா ளம்மாகா வனக்கொடியின் பால்வளரா
நன்மைமிகுந் தெப்பொழுது நண்ணுகுயில் -
தொன்மையலை

---

8. பிஞ்ஞகன் - சிவன்

9. குரைகடல் - ஒலிக்கும் கடல்.

10. கிள்ளை - கிளி.

11. மேதினி - உலகு.

12. கோம்பி - ஓணான்; குன்றாரா - குன்றில் உறையா.

13. காளம் - கருமை வண்ணம்; நண்ணுதல் - சேர்தல்.

வேலையிற்றோன் றாத்துணையை மேவா
வியன்றாளஞ்
ஞாலம் விலைமதியா நல்லமணி - நீலமலர்

செங்குமுதங் கோகனகஞ் செண்பகஞ்செங்
காந்தளையும்
பொங்கமுடன் கொண்டமுகாய்ப் பூத்தகொடி -
சங்கையிலாக்

கம்பியர்கை மேவாக் கனகா பரணமென்றும்
வெம்மை தராத வியனறுந்தேன் - செம்மைவளங்

கொண்டநெடு மால்கழந்து கொண்டுவராக்
கற்பகக்கொம்
பண்டி யொருவருந்தூண் டாவிளக்கு - மண்டலத்திற்

கண்டோர்க் கௌிதினெய்தாக் கல்லெறிப
டாப்புலன்கட்
குண்டாகு மின்ப வுசிதகனி - தண்டாமல்

மோந்து முடித்துவிடா மோகமிகு மாலைபணி
போந்திடாத தேயாப் புகழ்ச்சாந்தம் - பாந்தமதாய்

மங்குலிடி வாய்சேர் வல்லிரவில் வந்துவந்தே
யங்கனே தோன்றியழி யாதமின்னல் - சங்கையறக்

---

15. பொங்கம் - பொலிவு; சங்கை - அச்சம்.

17. கழந்து - ஓடி; கொம்பு + அண்டி - கொம்பண்டி.

18. தண்டாமல் - தணியாமல்.

20. மங்குல் - வானம்; சங்கையற - ஐயமின்றி.

கட்டி நறுக்கா காமனின் சிலையாகாத்
திட்டமுட னேகுனியாச் செங்கரும்பு - நட்டணையாய்த்

தென்றிசையி லங்கமின்றிச் சென்மியா துத்தரம்பார்த்
தென்றுந் செலாத விளந்தென்றல் - நின்றுபார்த்

தோடா வரியவலைக் குட்புகாப் புள்ளிபடாக்
காடாரா வின்பக் கவினிளமான் - தோடாரா

வண்டுறையாப் பஞ்ச வன்னம் வைகா வயன்சுமந்து
கொண்டிருக்கா துற்பவித்த கோகனகம் -
விண்டயனால்

25. அந்நாட் கடைபெற் றலைபெற்ற பாற்கடலி
லெந்நாளு மேயுதியா விண்ணாரமுதம் - பன்னாளுந்

தானவனைக் கண்டலராச் சான்றோனைக்
கண்டவுடன்
நானிலத்தி லேகுவியா நற்குமுத - மானிடமா

ரந்திவண்ணன் கண்ண னயனை மயக்கவென்று
வந்துலகில் வாழு மகாஜூட்சி - சந்ததமுஞ்

சீராய்க் கிரியிராச் செஞ்சமர்க் குரங்கினங்கை
சாராக் கனவமுத சஞ்சீவி - நேராய்

---

21. காமன் சிலை - காமனின் வில்;

22. சென்மியா - பிறக்கா; உத்தரம் - வடக்கு.

24. பஞ்சவன்னம் - பஞ்சவர்ணக் கிளி.

26. தானவன் - சந்திரன்; அலர்தல் - மலர்தல்.

27. கிரி - மலை.

நகைக்கிடமா காவிரதம் நண்ணிவரா நாளுந்
தொகைக்கிடமா காப்புதையாச் சொர்ண -
மிகக்கவினார்

30. புத்திரனென் றும்பாராப் போர்விசைய னைத்தழுவச்
சித்தமதி லாசைவையாத் தேவரம்பை - நித்தியமும்

பூசலே யாகாப் புகலுமறிப் பேர்புகாக்
காசினியெல் லாமணக்குங் கஸ்தூரி - நேசமுட

னெல்லாருங் காண வினிதா யிருநிலத்தி
லுல்லாசஞ் சேர்ந்துலவு மோவியப்பெண் - சல்லாபக்

## கூந்தல்

காரைவெளுப் பாக்கியருங் கங்குல்தனைத்
தேய்த்துணரா
தாருளத்தைத் தப்பாமற் றான்கலக்கி - யேரிலகுஞ்

சோலை வெறிகொண்டு தலைசுற்றிச் சுழலவைத்துச்
சால்வரலைப் பொடியாய்த் தானாக்கி - மேலுமலர்க்

35. கொன்றையைக்காட் டிற்றுரத்திக் கூறரிய சைவலத்தை
யென்றும் புனலி னிடையமிழ்த்திப் - பொன்றிகழு

மம்புவியில் வண்டை யருஞ்சிறைக்குள் ளாக்கிவைத்துச்
செம்பொ னிலவுபிறை சேர்ந்தறிய - வைம்பாலாய்

29. சொர்ணம் - பொன்; கவின் - அழகு.

31. காசினி - உலகம்; மறி - மான்; பேர் - பிராணி.

35. சைவலம் - பாசி.

நேர்ந்துநெறித் தேசுருண்டு நீண்டு கறுத்துமணஞ்
சார்ந்துபனி நீர்த்தரங்கந் தாங்கிநயங் - கூர்ந்து

ஞாலமிசை யாருமெந்த நாளு மதிசயிக்கக்
கோலமலர் கொண்டிலகுங் கூந்தலினா - ளேலவே

## முகம்

சங்கின்மே லோர்முளரி தான்பலபூக்
கொண்டிருந்தால்
அங்கதற்கொப் பாகுமெழி லானைத்தாள் -
பொங்குபுகழ்ப்

## நுதல்

40. பாப்பயபூ பாலன் பரவுவயித் தீசரங்க
நாப்பணில கும்பிறைபோ னன்னுதலாள் - பூப்புணையு

## புருவம்

மிந்திரசா பத்தை யிருநிறத்துக் குள்ளாக்கிக்
கந்தரத்தர் கைச்சிலையைக் கல்லாக்கி - யந்தமதன்

வில்லைவில்லை யாக்கியிந்த மேதினியோர்க்
காசையுளம்
புல்லநெறிப் பாரும் புருவத்தாள் - சொல்லரிய

## கண்

வண்டையறு காலாக்கி வாரியைமா சாக்கிவள
மண்டுமயி லைக்குந்த மாக்கியருங் - கொண்டைதனைத்

39. முளரி - காடு; ஆனனம் - முகம்.

தூண்டிறனிற் சிக்கவைத்துத் தூயவா னுறையிலிட்டுத்
தாண்டுமறி யைப்பிணையாய்த் தானாக்கி -
நீண்டிருந்தாட்

45. பாங்காவிந் தத்தைப்பங் கப்படுத்திப் பாலலைத்தா
னோங்குமதன் சாபத்துக் குள்ளாக்கிப் -
பூங்கணையைப்

பத்திர மென்றாக்கிப் பாவையிலே தான்வலையை
நித்தியமும் வீச நியமித்துச் - சித்திரங்கொண்

டஞ்சனமுஞ் சூது மருளுமற முங்கொலையும்
வஞ்சகமும் பொய்யுமகா மாயமுந்தான்-மிஞ்சவே

கொண்டுவெளுத் துக்கறுத்துக் கோலக் கடைசிவந்தே
யண்டினபேர்க் கின்ப மருளியன்பாய்-மண்டலத்திற்

சாதுரிய மாகமலர்ச் சண்பகமேற் பாய்ந்துவளர்
காதளவுந் தாவுமிரு கண்ணினாள்-போதவே

## மூக்கு

50. வெண்ணுறு மணங்க ளியற்கை யறிகுணத்தை
நண்ணுங் குமிழனைய நாசியினாள் - தண்ணளியார்

## வாய்

அண்டரமு துட்கொண்ட ருந்தருமத்
தின்றொகைகொள்
வண்டரளச் செம்பவழ வாயினாள்-வெண்டளவர்

---

50. தண்ணளியார் - இரக்கமுடையவர்.

51. அண்டர் - தேவர்; தரளம் - முத்து; தளவம் - முல்லை.

## எயிறு

தன்னை யலராக்கித் தரளத்தைத் தாழ்வாக்கி
யின்னமுமே ரெய்து மெயிற்றினாள் - உன்னியன் பாய்ச்

## நா

சொல்லிலொரு பொய்யிலாச் செவல்லின் சுவையறியும்
நல்லமலர்ப் பாதிரிபோ னாவினாள் - வெல்லிகல்வேல்

## கிளிமொழி

வாட்கண் மடவாரும் மன்முதனும் மானிடருங்
கேட்கி லினிக்குங் கிளிமொழியாள் - ஞாட்பிலகுந்

## இதழ்

55. தூதளையைக் கைப்பாக்கித் தும்பைத் துவராக்கி
மாதளையின் போதுகளை மட்டாக்கித் - தாதனைந்து

மின்னு முருக்கலரை மெய்ப்பாக வேதலைசாய்த்
தின்னமுத மூறு மிதழினாள் - மன்னுலகில்

---

54. ஞாட்பு - கூட்டம்.

55. போது - அரும்பு

56. மன்னுலகு - நிலைபெற்ற உலகு.

## கபோலம்

நாடிப் பலகையதாம் நாளுமுடை யாதொளிர்கண்
ணாடியைப்போ லுங்கபோ லத்தினான் - நீடுடைய

## செவி

இத்தலத்திற் செம்பொற்றோ டேந்தியிசை யேழறியுஞ்
சித்திரஞ்சேர் வள்ளைச் செவியினான் -
நித்திலங்கொண்(டு)

## கழுத்து

ஆந்தோளியை மேவிய யழகா யிருக்குதலாற்
காந்திவளைக் கொப்பாங் கழுத்தினான் - சாந்தமலை

## தோள்

60. மூங்கில் வெதிரென்று மூதுலகின் வாய்ப்படுத்தி
யாங்கரும்பை யாலைவா யாக்கிவைத்துப் - பூங்கமலச்

செங்கைதனக் குத்துணையாய்ச் சீராய்த் திரண்டிலகு
துங்கமுள வுத்தரிகத் தோளினான் -பொங்குமிசை

---

58. ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகியன; நித்திலம் - முத்து.

59. ஆந்தோளி - ஓர் இராகம்.

60. வெதிர் - நடுக்கம்

61. துங்கம் - உயர்வு

## முன் கை

கொண்டிருநல் யாழைவெறுங் கோலாக்கிக்
கொண்டுவளை
முண்டகப்பூப் பூத்தொளிரு முன்கையினாள் -
வண்டுறையுங்

## கை

காந்தளை விண்டேத்திக் கமலமல ரைமுட்டா
ளாந்தளரவே செய்துவள ரங்கையினாள் -பூந்திருவார்

## விரல்

செம்பவழக் கொம்பாய்த் திரண்டாழி யஞ்சுகத்தை
விம்பமுற மேவும் விரலினாள் - பைம்பொனொளிர்

## கொங்கை

65. சூதைவிருத் தப்படுத்தித் தூங்கல் கரியாக்கி
மோதுபந்தைக் கொட்டியடிக் குள்ளாக்கிச் - சீதமிடும்

நற்பதும மாமரும்பை நன்றாய்க்கண் ணிக்குளமைத்
தற்புதமா ரன்முடிகல் லாக்கிவைத்துப் - புற்புதத்தைக்

காட்டி யழித்துக் கமழ்கொங்கைக் காட்டினிலே
நாட்டிக் கவிழ்ந்தமுக நண்ணவைத்துத் - தீட்டுமெழி

---

64. ஆழி - மோதிரம்.

66. மாரன் - மன்மதன்;

வாய்ந்தமணிச் செப்பை .. ருவுங் கடைப்படுத்தி
யேய்ந்தசக்ர வாளமண்ட மேற்றியுளத் - தாய்ந்தமலர்க்

கும்பஞ் சலமதனைக் கொள்ளவைத்துக் கூவிளத்தை
வெம்பரிய முட்கவட்டின் மேலவைத்தே - யிம்பருளச்

70. செய்ய விளநீரைத் தீராக் கொலைப்படுத்தித்
துய்யமலர்ச் செண்டைநார் சுற்றவைத்துப் - பையவே

மாங்கனியைக் கண்டோர்கள் வாங்கவிலை
யாக்கியொலி
தாங்கிவருந் தாளத்தைத் தட்டவைத்தே -
யோங்கிவளர்

விந்த கிரியடக்கி மேருவைச்செண் டாலடித்து
மந்தரத்தை மாலயன்கை மத்தாக்கிக் - கந்தரமார்

மைக்கடலின் மைநாக மாமலையைத் தானமிழ்த்தி
யக்கயிலை வெற்பைவெள்ளை யாயமைத்து - மிக்கத்

தடித்துப் பணைத்துத் தனக்குக் கனக்கப்
புடைத்துப் பருத்துப் புகழ்ப்பொற் - படிக்குட்

75. டரிப்பற்குளத் திற்றரிக்கக் கதிக்கச் செருக்குச்
செறிப்பச் சிறப்புற் றிருக்க - நறுஞ்

சந்தன குங்கும தண்களப ங்களொ
டுந்திக ழும்புழு குந்தொயி - லந்தமி

---

68. சக்கரவாளம் - ஒரு மலை; அண்டம் - ஆகாயம்.

76. களபம் - கலவைச்சாந்து.

கும்படி கொண்டு சுணங்கு பரந்தொளிர்
சம்பிரம் மிஞ்சிய சங்கில - கும்பரு

முத்தாரங் கொண்டு முனைகொண் டிறுமாந்து
வித்தார விம்மி மேனோக்கி - யொத்தீரு

மீர்க்கி னுனியு மிடைபோகா மற்றுதைந்து
தீர்க்க முகங்கறுத்துச் சிங்காரப் - பார்க்குட்

80. கதிர்மா மணிநடுவிற் காட்சியாய்த் தோன்றும்
விதமா மணியார மேவிச் - சதகோடி

செட்டி ரவுக்கை கிழித்தெறிந்து நித்தியமுங்
கட்டழகு காட்டுங் கனதனத்தாள் - இட்டமுடன்

மன்னுமால் மேவலினல் வாரணத்தைக் காக்கையின்மா
லென்னு முரோமயி ரேகையினாள் - அன்னமிகுங்

## உந்திச் சுழி

கங்கையிலுண் டாஞ்சுழிபோற் காட்டிக் கரக்காமற்
றுங்கமுறு முந்திச் சுழியினாள் - தங்குவத

---

77. சம்பிரதம் - இந்திரசாலம்;

78. முத்தாரம் - முத்துமாலை; வித்தாரம் - விரித்தல்.

79. துதைந்து - நெருங்கி.

83. கரத்தல் - மறைத்தல்;

## உதர வரை

முன்னி வளர்பெரியோ ருள்ள மெனும்படியாய்
மன்னு முதர வரையினாள் - மின்னுமல

## வயிறு

85. ரேய்ந்து வளரா விலைக்கல்லை யாக்கியெழில்
வாய்ந்து விளங்கும் வயிற்றினாள் - காய்ந்து

## சிற்றிடை

துடியை யடித்துமின்னைத் தோற்றி யழித்துக்
கொடிபடராச் செழும்பூர் கொம்பைக் - கடிகொளவே

செய்துநூ லரசாக்கிச் சிங்கமடங் கற்பெயரை
யெய்த மகிழ்வா யிசைத்தென் றும் - மெய்திகழும்

பாராளு மகராச பாப்பயபூ பாலமுகில்
சேராரைப் போற்றேய்ந்த சிற்றிடையா ளோரார்ந்து

விம்பமுறும் வாழை விரிதலையாய் நாணவைத்துத்
தும்பியின்கை யைச் சுழட்டித் தூங்கவிட்டு - வம்புமலர்

## தொடை

90. மன்னுகணை யாமன் மதனுக்கு மையல்தருஞ்
சொன்ன நிறமான துடையினாள் - மின்னுசெம்பொன்

---

85. அல்லை - பிணக்கு

88. சேரார் - பகைவர்.

## முழங்கால்

வண்டிலைக்கா லாக்கி வளையொளிக்க
வைத்துவெண்டைக்
கண்டவர்க ளிக்குமுழங் காலினாள் - கொண்டவம்புத்

## கணைக்கால்

தூணியைவா ரால்வீக்கித் தூயவ ரா லுலத்திக்
காண வீங்குகணைக் காலினாள் - ஆணிப்பொன்

## பரடு

இட்டுநிறுக் காவணிக ரேந்தாத தார்செனவே(?)
க ... காட்டியெந்தக் காலமுந்தான் - இட்டமதாய்

ஓதசர மாகவைத்த ருல்லாச நூபுரம்போற்
பாதசர முஞ்சூழ் பரட்டினாள் - சோதிசெயும்

## புற அடி

95. நற்கமல மேலுமெந்த நாளுமினி தாயிருக்கும்
பொற்கமலம் போலும் புறவடியாள் - சொற்கடங்காத்

---

91. வளை - பொந்து.

92. அம்புத்தூணி - அம்புக்கூடு;
ஆணிப்பொன் - உயர்ந்தபொன்.

94. பரடு - புறங்கால்.

## பதம்

தாமரையை நீரிலொரு தாளினிறுத் திச்சிவந்து
மாமதியம் பெற்று மருவிவருங் - காமுகர்கள்

சிந்தைவிழி யுந்தினமுஞ் சீராய்த் திறைகொண்டு
பைந்தளிரை வென்ற பதத்தினாள் - சந்தமிகும்

## நடை

அன்னம் பறந்திடப்பெண் ணானைதனைப்
பிடியென்(று)
உன்ன நடக்கு முயர் நடையாள் - மின்னொளிருங்

## சாயல்

காரமரும் வெற்பிற் கரவாய் மயிலினங்கள்
சார விளங்குகின்ற சாயலினாள் - சீரமரும்

## மேனி

100. மாந்தளிரோ மாத்துறையோ மாதங்க மோசுரும்பு
மோந்திடாச் சண்பகமா மோவென்ன - வேந்துபணிப்

பூவுலகெல் லாமயங்கப் பொற்பரந்தி யற்கைமண
மேவி விளங்கருமை மேனியினாள் - தேவரும் வந்(து)

---

98. பிடி - பெண் யானை

99. கார் - மேகம்; வெற்பு - மலை;

100. சுரும்பு - வண்டு.

## அழகு

உற்பமை தாகப்பார்த் துள்ளநா ளுள்ளமட்டு
மற்புதமே கொள்ளு மழகினாள் - பொற்புயந்த

## மேன்மை

மண்டலமு மெண்டிசையு மாநரக லோகமுஞ்சொல்
விண்டலமு மேபுகழு மேன்மையினாள் - அண்டிமிக

நன்றாய் வளர்நலத்தி னாணயத்தி னாணாளுங்
குன்றா வமுத குணத்தினாள் - நின்றாரு

105. மோதுமஞ்சஞ் சேர்தலினா லும்பரையே மேவுதலா
லேதமிலா வெண்கணெண்கை யெய்துதலால் -
ஆதரவாய்ப்

புண்டரிக நண்ணுதலாற் பொன்னாக மேவுதலாற்
றண்டுங்க மண்டலத்தைச் சார்தலினாற் -
கொண்டிருந்தேன்

போதுமுக நான்கையுமே பொற்பாய்ப்
பொருந்துதலாற்
வேதனுக்கொப் பானமக மேருவினா - னீதியாய்

---

102. உற்பனம் - மேன்மை

103. விண்டலம் = விண் + தலம்.

105. உம்பர் - வானோர்;

106. புண்டரிகம் - தாமரை

## தலைவன் நாடு

வண்ணமலை யேந்துதலால் மாகமலை மேவுதலாற்
றண்ணளியை நாடோறுஞ் சார்தலினால் - எண்ணரிய

சங்க மருவுதலாற் சக்கரத்தை நண்ணுதலால்
அங்கணிலத் தைக்கீறு மற்புதத்தாற் - பொங்குவிறல்

110. நண்ணுதலாள் மேன்மை நணுகுதலால் நற்றுளபக்
கண்ணனையொப் பாகியகங் காந்தியான் -
திண்ணமதாய்

மாதுவரை நண்ணுதலால் மனனை .. மேவுதலாற்
போதிலகுங் கங்கை பொருந்துதலாற் - சீதமிகு

இந்தீவரத் தையன்று மெய்துதலா லிப்புவியில்
நந்தாமற் கற்றவரை நண்ணுதலாற் - கந்தாருஞ்

சாதுரிய வேழந் தனையுரித்தாந் தன்மையினான்
தூதனொப்பாங் காம்பீலி நாட்டினான் - சோதிமுகும்

## ஊர்

வானகமான் மேவுதலால் மாசந்தா னஞ்சேரும்
மேலைத்தா லம்பகமெய் மேவுதலால் - தானிதமும்

115. இப்பாரு மேதுதிகக் கிந்திரனுக் கெஞ்ஞான்றும்
ஒப்பாம் பெருமுளைசை யூரினான் - முப்பூவை

---

108. மாகம் - மேகம் ; தண்ணளி -

112. இந்தீவரம் - கருங்குவளை.

115. தலைவனின் ஊர் பெருமுளைசை என்பது பெறப்படும்.

## மாலை

யாணலத்தை மேவுதலா லந்தணனை யெய்துதலால்
வாணியொப்பாம் பூங்கமல மாலையினான் – காணரிய

## புரவி

வாரிபுடை சூழுமணி மாநிலமு மேயதிர
மேருகிரி தானுமிக வேயசைய – வாருமிசை

வானவரு மேவெருவ மாகமிசை யேயொளிரு
மீனுநில மீதுதிர மேவலாக – தானுமமர்

வீரம் வலியிழந்து வெண்காட் டிடவரிய
மூரி மகுட முடியிடறுந் – தீரமுடன்

120. ஐங்கதியு மேன்மே லடலுங்கொண் டார்ப்பரிக்கும்
பொங்குமுன் பச்சைப் புரவியினான் – மங்குலார்

## யானை

அட்டகுல வெற்பசைய வட்டகெச முற்றநிலை
விட்ட ... வாட்டலர்கள் விட்டுமெயில் – தட்டுறவு

பூக்கள் மிகுத்தொழுக மொய்த்திட வளித்திரள்கள்
திக்கதிர மற்றிற் றுதிக்கொடு – தொக்கமுகில்

118. வெருவ – அஞ்ச.

119. மூரி – பெருமை, வலிமை.

120. அடல் – வீரம்.

122. அளித்திரள் – வண்டுகளின் கூட்டம்; திக்கு – திசை;

தன்னை யடித்துத் தான்குடித்த நீர்பிழிந்து
நன்னயமா கப்பருகி நட்டோர் - மன்னுபுகழ்

மேன்மையுல கந்துதிக்க வெய்யசமர் வேட்டைசெயும்
பான்மை யயிரா பதத்தினான் - தேன்மருவும்

## கொடி

125. நற்றளப மாலருளும் நான்முகன்முன் னாட்கொடுத்த
கொற்றமிகு மன்னக் கொடியினான் - முற்றுமே

## முரசு

வென்றிகொடை கல்வியானை மேன்மேலு மேவிளங்க
முன்றிலதி ருஞ்சருதி மும்முரசான் - வன்றிறலார்

மானிடர்விட் டம்புவிவாழ் மானிடர்வந் தேவணங்கு
மான்கொடி நாட்டிவரு மாணையினான் -
தேனெனுஞ்சொல்

## தலை

மங்கைபங்கர் வேளூர் வயித்தியநா தப்புனிதர்
செங்கமலத் தாள்வணங்குஞ் சென்னியினான் -
துங்கமதாய்

## முகம்

வெங்கதிரோ டுங்கூடா வெய்யபனி யான்மறையாத்
திங்களுக்கொப் பாகுந் திருமுகத்தான் - தங்குபுகழ்

---

124. சமர் - போர்.

## நுதல்

130. மண்டலத்தின் மூன்றாயோர் வான்பிறையைக்
கண்டதெனப்
புண்டரவெண் ணீறு புனைநுதலான் -
தண்டமிழ்சொல்

## பார்வை

மாக்கவிஞ ருக்குமுன்னூன் மார்பருக்கும் யாவருக்கும்
பாக்கியநல் குங்கருணைப் பார்வையினான் - ஊக்கத்

## செவி

தவசரிதங் கேட்பதன்றித் தப்பாதெப் போதுஞ்
சிவசரிதங் கேட்குஞ் செவியான் - நவிலரிய

## நாசி

பொன்மருவி நீண்டுயர்ந்து பூவுலகி லெப்போது
நன்மணங்க ளைத்தேரு நாசியினான் - தொன்மையாய்

---

128. தஞ்சை மாவட்டம் மாயவரம் தாலுகாவைச் சேர்ந்த வேளூர் எனும் வைத்தீசுவரன்கோயில் இங்கு குறிக்கப் பெறுகிறது; படிக்காசுப் புலவர் புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் இயற்றியமை அறியலாகும். சென்னி- தலை.

## நா

நீடுபுகழ் சேரும் நிருபர் முடியசைய
நாடசையச் சொல்லசைக்கு நாவினான் - பீடுடுத்தி

## கழுத்து

135. யொண்டா ரணிபோற்ற வோங்கும் கலைவாணிக்
கண்டா பரணக் கழுத்தினான் - பண்டான்

## புயம்

மிகுவலையஞ் சூழ விசையஞ்சே ருங்கனக
வாகுவலை யஞ்சூழ் மணிப்புயத்தா - னோகையாய்ச்

## கை

செப்பரிய தேசாதி தேசமன்னர் சென்றிறைஞ்சிக்
கப்பமிட வொப்பமிடுங் கையினான் - துப்பதாங்

## மார்பு

கண்டா மினியமொழிக் காரிகையார் காதலிக்கும்
வண்டா மரைமாலை மார்பினான் - தண்டார்கொள்

## இடை

மின்றிகழ்வேன் மேவலரை வென்ற வியனுடைவா
ளென்று மிலகு மிடையினான் - பொன்றிறையிட்

134. நிருபர் - அரசர்
136. வாகுவலையம் - தோளணி.

## பதம்

140. டந்திபக லன்பா யடையார் முடியமுந்த
வந்து வணங்கு மலர்ப்பதத்தான் - சுந்தரஞ்சே

## கருணீகர் குலத்தினான்

ராகுவெள்ளி மாமலையி லண்டரெல்லாஞ் சூழமலர்க்
கோதையுமை பாகன் கொலுவிருக்கும் - போதுதுர்

வாசமுனி வந்திடவே வந்தனைசெய் தார்முனிவ
ராசிலா நான்முகனவ் வாரணங்கும் - நேசமுடன்

சற்று முபசரியாத் தாழ்வினால் நீர்பிறப்பை
யுற்றிடுமென் றேசபிக்க வொண்புவியி - னற்றுளவ

மாலைமால் வேண்டவிந்த மாநிலத்தில் வண்கமல
மேலிருவர் தாமுதித்து மேன்மையே -
சாலவெண்ணென்

---

140. அடையார் - பகைவர்

141. கையிலையில் சிவன் முதலியோர் அவையில், துர்வாச முனிவராலே அவரை வரவேற்காததால் பிரமன் பிறப்பைப் பெறும் படியாகச் சாபம் தருகிறார் முனிவர். பிரமனே சத்திரியாகப் பிறக்கிறார் இவர் தேவி சரஸ்வதியே சுபகுணமாலையாகப் பிறக்கிறாள்.

142. நான்முகன் - பிரமன்.

143. துளப மாலைமால் - திருமால்.

145. புத்திரரைப் பெற்றுப் ... வரியதவ
நித்தியஞ்செய் தேபதமுன் னீர்பெறுமென் -
றெத்திசையும்

போற்றிடவே பின்னும் புகலுமுனி சொற்படியே
யேற்றமுள வேதனுமவ் வேந்திழையுஞ் - சாற்றரிய

நல்லபுகழ்க் காம்பீலி நாடணுகி நற்றடத்தின்
மல்லிலகும் பூந்தா மரைமலரின் - மெல்லவே

வந்துமினி தாயுதிக்க வாய்ந்துபுரு டோத்தமன்றன்
சிந்தை யுவந்துகண்டு சென்றெடுத்துப் -
பைந்துவர்வாய்த்

தன்மனைவி கைக்கொடுத்துத் தானத் திரியெனவு
நன்மையுள பார்துதிக்க நாமமிட்டுச் - சொன்மருவு

150. மைந்து வயதி லணிந்துநூல் நால்வேதஞ்
சந்ததமு மோதுவிக்கத் தானறிந்து - மிந்தநல

முற்றுவரு நான்நமது தொல்விசைய மாபுரத்தில்
வெற்றிக் ...... தந்த வெற்பிலொரு - நற்றடத்திற்

பூங்கமல மேலுதித்தா போர்விசைய பாலமன்ன
னாங்கினிதாய் வேட்டைவிளை யாடுமப்போ -
தோங்குகுரற்

கேட்டுவந்து பார்த்துவந்து கிட்டினனாம் வேதியனைத்
தாட்டிகவா னீயெடுத்துத் தான்கொணரென் -
நீட்டுபுகழ்த்

---

147. மல்லிலகும் - வளம்பொருந்திய

150. சந்ததம் - எப்பொழுதும், பலகாலும்.

தன்னகரில் வந்தவுடன் றானீ வளர்த்திடென்று
மன்னருளாற் சொல்லிநிதி யீந்துமதி - நன்னுதலிற்

155. சுட்டியணிந் தென்றுஞ் சுபகுணமா லைப்பெயரை
யிட்டுவித்தை யெல்லா மினிதறிவித் - தட்டதிக்கும்

போற்ற வருநாளிற் பூவைமணக் காலந்தேர்ந்
தாற்றலிறை யாள்புவிக்கு ளந்தணருக் - கேற்றமா

மங்கல வோலை வரைந்தனுப்பச் செய்தியறிந்
தங்க ணிலத்திலுள வந்தணருஞ் - செங்கைமுகில்

வேதியனா மத்திரியும் வேல்விசைய பாலனெனு
மாதரையாள் மன்னவனை வந்துகண்ட -
போதிலன்பாய்

வந்தவருக் கெல்லாம் வரிசை விடுதியமைத்
தந்தநாட் சென்றிடமற் றொருநாளிற் - பந்தரின்கண்

160. கல்யாணக் கோலமதாய்க் கன்னிகையைத்
தானமைத்து
நல்வேத வந்தணரை நாடியுமே - செல்விதனக்

கீடிலா வித்தைதனக் கீடுசொன்னோர்க் கேமாலை
சூடுவளென் றேநிருபன் சொல்லமின்னாள் -
நாடியோர்

வீணையெடுத் தேபடிக்க வேதியரெல் லாம்பார்த்து
நாணமுற்றிவ் வித்தைக்கு நாங்களென்று - நீணிலத்தி

---

155. சுட்டி - நுதலணி; அட்டதிக்கு - எட்டுத்திசைகள்.

161. நிருபன் - அரசன்

லொப்பாகா தென்றென் றுரைத்திடவே யத்திரியாம்
விப்பிரன் சங்கீதம் விளம்பிடவே - செப்புத்

துணைமா முலையாள் சுபகுணமா லைப்பெண்
மணமாலை சூட்டி மகிழ்ந்தா - ளிணைபகரு்

165. கோதில் பிரமரிஷி கோத்திரமுங் கூறிய
சோதி திராயாயன் சூத்திரமு - மேதகையு

முள்ளபுரு டோத்தமன் பேரோங்குசுத னத்திரியாம்
வள்ளலுக்கு நால்வேத மார்க்கமெல்லாந் -
தென்னிமையாய்க்

கற்காமுன் றேருங் கவுண்டின்னிய கோத்திரமுஞ்
சொற்காத்தி யாயனாற் சூத்திரமு - நற்காட்சி

யும்பெற் றகுளு முயர்கிருஷ்ண தேவனரு
ளம்பொற் சுபகுணமா லைத்திருவாங் -
கொம்பையன்பாய்ப்

பாணிக்கி ரகணமின் று பண்ணிக் கொடுத்தனமென்
றாணிப்பொன் றூக மருளியிந்தச் - சேணிலங்க

170. ளெல்லா மதிக்க விசைந்தனுப்பச் சென்றுமகிழ்ந்
துல்லாசஞ் சேர்ந்திருவ ருங்கூடிச் - சல்லாப

---

163. விப்பிரன் - வேதியன், பிராமணன்

164. துணை - இரண்டு

165. கோதில் - குற்றமற்ற.

167. தேரும் - தெளிவடையும்

169. பாணிக்கிரகணம் - திருமணம்; தூக - சேலை.

மாமாறு பத்துநான் காஞ்சுதரைப் பெற்றெடுத்துத்
தாமார்பின் முன்னூற் றரிப்பித்துப் - பூமீதி

லாறு தொழிலமைத்தன் பாய்வளர்க்க வேவளரும்
வீறுகண்டு தந்தை மிகமகிழ்ந்து - தேறுநைமி

சாரணயஞ் சார்மா தவரைச் சுதர்க்கன்பு
கூறு மறுத்தின்ற கோத்திரமுஞ் - சீரிருமுன்

றானநல் சூத்திரமு மன்பாய்க்கேட் கத்தவத்தோர்
தானுதவப் பெற்றுமைந்தர் சற்குணமும் -
ஞானமுந்தான்

175. கண்டுபதி னாறாண்டிற் கல்யாணஞ் செய்யமனங்
கொண்டுவிசா ரிக்கவும்பெண் குண்டிகைக்கைப் -
பண்டுமறை

வேதியரைத் தானனுப்ப வேதியர்காம் பீலிநாட்
டாதியா நற்கேதா ரத்திலுள - போதமறை

கூறும் புலத்தியர்தங் கோத்திரஞ்செய் யுந்தொழில்க
ளாறுளவன் போதாயன சூத்திரன் - தேறுபுகழ்ச்

சங்கரசோ மாசிதந்த தையலரெண் ணெண்மரையு
மங்கலமுஞ் செய்துவைத்து மைந்தரையும் -
பொங்கமுடன்

தந்தைமிக வாழ்த்தித் தழைத்திருமென் றேமிகவுஞ்
சிந்தையுவப் பாய்த்தபங்கள் செய்திடவே -
யந்திவண்ணன்

---

175. குண்டிகை - கமண்டலம்.

177. தையலர் - பெண்கள்.

180. மேவுங் கயிலைமலை மேவினான் மைந்தரிடத்
தாவற்கு சுபகுணமா லைத்தெரிவை - பூவுலகின்

மைந்தரிடஞ் சின்னாள் மகிழ்ந்திருந்து[1]
(நன்மையதாய்ப்)
புந்தி தெளிந்தினிதாய்ப் போந்திரு - வருந்தவங்கள்

பாங்குடனே செய்யப் பகமுனிசா பந்தொலைந்து
பூங்கமல நான்முகனு பொற்கொடியு - மோங்குபதம்

பெற்றுமுன்பு போவிருந்தார் பேரான ராம்புதல்வர்
நற்றவங்கள் செய்தோத னாபுரியி - லூற்றிருக்கு

நாளினிற்சோ மன்தொண்டை நாட்டிலுயர்
காஞ்சியில்வந்
தாளையா வென்றுதுதித் தஞ்சலித்து - வேளைவிழி

185. யாலெரித்த வங்கணனை யன்பாய்த் தெரிசித்து
மேலவுமே பன்னாளங் கேயிருக்குங் - காலையினில்

வேட்டை செயக்காட்டில் வேந்தனார் சேனையுடன்
தாட்டிகமா கச்சென்று தான்செயுங்கால் -
வாட்டமுறும்

---

180. தெரிவை - பெண்; இருபத்தாறு முதல் முப்பத்தொரு வயதிற் பெண்.

184. வேளை - மன்மதனை

185. அங்கணன் - சிவன்

186. சேனை - படை; தாட்டிகமாய் - வலிமையாய்.

---

1. நனபதிரற எனப்பாடம்

வெய்ய பசியால் மிகவிளைத்துச் சேனையுடன்
செய்யசஞ்ச லம்முனியைச் சென்றிறைஞ்சித் துய்யவனே

வெம்பசிக்கே யன்னமிக வேண்டுமெனக் கேட்கவந்தப்
பைம்புனத்தோன் அட்சயமாம் பாத்திரத்தை -
யம்பெனுங்கண்

கன்னிகையி லேகொடுத்துக் காவலவன் சேனைக்கு
மன்னமிடென் றேயுரைக்க வம்முனிவன் -
சொன்னபடிக்

190. கன்னமிட் டேயருந்தி யாயாசந் தீர்ந்தவுடன்
தன்னகருக் கேகமனந் தன்னிலுவந் - துன்னிமுனிப்

பாலணுகிப் பாத்திரத்தைப் பாங்காய்த் தருகெனவசச்
சீலா முனிமறுக்கச் சேனைமன்னன் - கோலமுடி

தன்னையசைத் தேகவர்வேன் தானெனவெ நல்லமுனி
வன்நகைசெய் தேநோக்க மன்னனொடு - துன்னிவருஞ்

சேனைதனைக் கோபமிகுஞ் செந்தழல்கா யப்பயந்து
ஞானமுனி வன்னிடத்தில் நண்ணிநின்றே -
யானிழைத்த

195. குற்றம் பொறுத்தியெனக் கும்பிடவே கோதிலா
நற்றவத்தோன் நல்லதென்க நண்ணியின்பம் -
வெற்றிபுனை

---

190. ஆயாசம் - களைப்பு

193. துன்னிவரும் - நெருங்கிவரும்.

194. நண்ணி - நெருங்கி.

195. கோதிலா - குற்றமில்லாத

மன்னன் முனியை வருந்தி யழைக்கவந்த
நன்னரெண் ணெண்மைந்த ....... - வேல்

வேந்தன் சிவத்தலங்கள் மேவித் தெரிசனஞ்செய்
தேந்துபுகழ்க் காஞ்சியில்வந் தெய்திடவே -
பூந்தொடையார்

பைம்பொற் புயவிசைய பாலன் தவமுனியும்
அம்புதல் வர்கேட்க வாதீனஞ் - செம்பியனும்

எண்ணெண் குமரர்களும் எப்போதும் வாழ்ந்திருக்க
எண்ணெண் பதிகாண் ஈந்தருள - நண்ணுலகிற்

200. பண்டெண்ணெண்கோத்திரமும் பாங்காறு சூத்திரமுங்
கொண்டகரு ணீகக் குலத்தினான் - தண்டமிழ்ச்சொல்

வாழ்கீர்த் தியார்கபில மாமுனிதன் கோத்திரத்தான்
சூழ்காத்தி யாயனநற் சூத்திரத்தான் - தாழ்சடையார்

வஸ்த்துவையின் னம்பூர்வாழ் வள்ளலைமுன் அன்பாக
வஸ்த்தகனா கப்படைத்த அம்புயவேள் - முத்தமிழ்சேர்

துங்கன் மதுரைநகர்ச் சொக்கேசர் பாடற்குஞ்
சங்கையிட்டுக் கொண்டபுகழ்த் தாட்டிகவான் -
கொங்கலர்தார்ச்

சுந்தரனார் தன்மணத்திற் சோதிமறை யோனாக
வந்தடிமை கொள்ளவந்த வழக்கேறி - முந்தையிவன்

---

198. செம்பியன் - முன்சோழன்

203. துங்கன் - மேன்மையுடையோன்

204. சுந்தரனார் - சுந்தரமூர்த்தி நாயனார்

205. ...... தென்றுரைத்துத் தான்கொடுக்க வேவாங்கி
மாதயவாய் வாசித்த மானபர - னோதைமுன்னீர்த்

திண்பார் புகழத் திருமுருகாற் றுப்படைமுன்
பண்பாயப் பரங்குன்றிற் பாடியமால் - நண்பாக

மீனவன்கூன் வெப்பகற்றி வெண்ணீ றணிவிக்கத்
தானினிதாய்ச் சம்பந்த ரைச்சிவிகை - மேனலஞ்சேர்

பொன்னார் மதுரா புறிக்குவரச் செய்யமைச்சன்
முன்னா னிலத்திலஞ்சாம் வேதமென்றே -
வென்னாநெஞ்

## நாவல்லான்

சாற்றறிய பாரதமுந் தண்டமிழாற் செய்துபுகழ்
நாற்றிசையு நாட்டிவைத்த நாவலவன் - போற்றரிய

210. நெற்கணக்கும் பொற்கணக்கும் நீண்ட நிலக்கணக்குஞ்
சொற்கணக்குந் தானெழுதுஞ் சுந்தரமால்
நற்கொடையார்

## டியூப்ளே வெகுமதி

வங்காளர் சீனர் மலையாளர் மராடர்
சிங்காரக் கொங்கர் தெலுங்கரங்கர் - கொங்கலர்தார்

---

206. பரங்குன்று - திருப்பரங்குன்றம்

207. கூன்பாண்டியன், நின்றசீர், நெடுமாறனாக ஆகிய கதை;
வெண்ணீறு - திருநீறு; சிவிகை - பல்லக்கு.

மன்னவரும் வந்து வணங்குமலர்த் தாட்புதுவைத்
தென்னன் பிரஞ்சுமன்னர் தீரனிகற் - கொன்னுனிவேற்

செண்டிரல் கவர்னர் துரை திப்பிலே யெனுந்துரையு
மண்டலமே போற்றும் தருமமுகில் - கொண்டரச

ரெல்லாரும் போற்று மியல்புந் தயிரியமு
முல்லாச மாகக்கண் போகையாய்ச் - சல்லாபப்

215. பொற்சிவிகை யும்பரியும் பொங்குமத வாரணமு
நற்சுரிகை யுஞ்சொல் நவபத்து - மற்செறிவெண்

சாய்மரையும் வெண்குடையுந் தங்க வரியையுநற்
றூய்மை யிலகுமணித் தோளணியுங் - காமருள்

சீரார்செங் கோலுஞ் செயமும் வெகுமதியும்
பேராசை யாய்க்கொடுக்கப் பெற்றுமலர்த் - தாராருங்

---

212. புதுவை - புதுச்சேரி

214. ஓசையாய் - மகிழ்வாய்

215. பரி - குதிரை; வாரணம் - யானை; சுரிகை - உடைவாள்; நவபத்து - முரசு.

216. வெண்சாய்மரை - வெண்சாமரம்.

217. செயம் - வெற்றி

# பிரசிறப்புக்கள்

காவலர்கள் கப்பமிடக் கர்நாட கச்சபையை
மாவலிமை யாய்ப்புரக்க வந்தருள்வோன் - நாவலர்
சொல்

மங்கலஞ்சேர் கீர்த்தியினான் மாறாத வாய்மையினான்
கங்கை நதிபோற் கருத்தினான் - சங்கிடும்

220. புண்ணியஞா லம்போற் பொறுமையினான்
போதயன்கை
நண்ணுதுலை நாப்போல் நடுவினான் - எண்ணுமனு

நீதிசேர் சொல்லினான் நீள்நிலமெல் லாம்பரிக்கும்
ஆதிசே டன்போல் அறிவினான் - மாதிரஞ்சொல்

மல்லிவரு மூருணிநீர் வாவியைப்போல் வாழ்வினான்
நல்லபிறை போல்வளரு நட்பினான் - தொல்லுலகம்

போற்றுமுரு வார்மதனன் போலும் வடிவினான்
வேற்றடங்கை வேள்போலும் வெற்றியினான் -
நாற்றிசையுங்

கொண்டாடுங் கார்காலக் கொண்டலைப்போ
லுங்கொடையான்
வண்டாடும் வாகைமலர் மாலையான் - அண்டார்கள்

---

219. சங்கிடும் - இயங்கிடும்

220. ஞாலம் - உலகம்

222. மல்லிவரும் - பெருகிவரும்; வாவி - குளம்

224. கொண்டல் - மேகம்; அண்டார் - பகைவர்

225. அந்திபக லுமலமரல் கொண்டஞ் .......
வந்து திறையளக்கும் வாசலினான் - விந்தையதாய்ச்

சிந்தை மகிழ்ந்துசிறு தேர்நடத்திச் செங்கனிவாய்
மைந்தர் விளையாடும் வாசலினான் - இந்துநுதல்

தாதமர்ந்த பூங்கோதை தண்டளவ மூரல்திரு
மாதுவந்து வாழ்ந்திருக்கும் வாசலினான் - ஆதரவாய்ச்

செந்தமிழ்சேர் நாவலருந் தேசிகரும் யாசகரும்
வந்து புகழ்ந்திருக்கும் வாசலினான் - கந்தமிகும்

பைந்தொடையா ரும்புலத்தைப் பத்தாறு தேசமன்னர்
வந்திறைஞ்சிக் காத்திருக்கும் வாசலினான் -
கொந்தலர்தார்

230. நண்ணுதமிழ் நாவலரை நண்ணுவீ ரென்பதுபோல்
வண்ணமுர சம்முழங்கும் வாசலினான் - எண்ணரிய

பூதானங் கோதானம் பூரிதா னம்பெரிய
மாதான மும்வழங்கு வாசலினான் - ஓதாழித்

திண்மையுல கஞ்செழிக்கச் சீராக வேயசையா
வண்மணியார் ஆசார வாசலினான் - உண்மையாய்த்

தஞ்சமென வந்தோரை (உபசரி)க்குஞ் சங்கநிதி
வஞ்சியார் சிக்கவளர் மன்மதவேள் - செஞ்சொலுற்ற

---

225. அலமரல் - அஞ்சுதல்; திறை - கப்பம்

231. கோ - பசு; பூரி - பொன்; ஓதாழி - அலைகடல்

மக்களொடு மிந்திரன்போல் வாழ்ந்துண் டிருக்குமுகில்
திக்குவிசை யஞ்செலுத்துஞ் செங்கோலன் - மிக்க

235. கலங்காத வொன்னார் கலங்கவும் வென்றிந்த
நிலங்காவல் கொண்ட நெடுமால் - அலங்கார

## நூற்புகழ் கொண்டோன்

பஞ்சகம்வா கைமாலை பன்மணிமா லைக்கதிக
வஞ்சிமா லையும் மணிமாலை - எஞ்சலிலா

வங்கமா லைத்தார கைமாலை சீர்மாலை
பொங்கமுடன் கொண்டசின்னப் பூமாலை -
இங்கிதமார்

நற்கலம்ப கங்காதல் நாழிகைவெண் பாவூசல்
சொற்குயர்பிள் ளைக்கவிதை தூதுமடல் - முற்கவிஞர்

சொல்லுமகப் பாட்டுறுப்புச் சொல்லலங்கா
ரக்கோவை
நல்லதசாங் கப்பஃதூர் நண்ணுவெண்பா - நல்லுலாப்

240. பற்பலவாய்ச் சொன்னபிர பஞ்சவகை யெல்லாமும்
விற்பனமா கக்கொண்டு மெய்ப்புலவர்கள் -......

---

234. முகில் - மேகம்

235. ஒன்னார் - பகைவர்.

236. இதுமுதல் ஐந்து கண்ணிகளில் இவனைப் பாடிய பிரபந்த வகைகள் நவிலப்பெறுகின்றன.

## புலவோர் புரப்போன்

தந்திபரி பொற்சிவிகை சார்கவிகை யும்பளமூர்
முந்து பதக்கமுயர் முத்தாரம் - விந்தைமிகும்

அஸ்தகடை யங்கடுக்கன் ஆழியொளிர் நான்குன்கை
வஸ்திரஞ்செம் பொன்னுநல மாகமிரகச் - சித்தமகிழ்ந்

தெப்பொழுது நல்கியன்பாய் ஏமுடியின் சென்றுலகஞ்
செப்பரிய கீர்த்திகொண்ட தென்னவர்கோன் - ஒப்பில்

## கோயில் திருப்பணி புரியும் மாண்பு

தரணி புகழ்வேளூர்த் தலைவ ஒருளாற்
பரணிகொளும் வெற்றி படைத்தோன் - முரணிலாப்

245. புள்ளிருக்கும் வேளூர்ப் புனிதருக்குந் தென்புலியூர்
வள்ள லுக்குங் காசியிலு மாபதிக்கும் - வெள்ளை
விடைக்

கச்சியே கம்பருக்குங் கானத்தி நாதருக்கும்
மெச்சுதமிழ்க் கூடலெங்கள் வித்தகற்கும் - நச்சர்வஞ்

---

241. தந்தி - யானை; பொற் சிவிகை - பொற்பல்லக்கு;
உம்பளம் - வெகுமதி, கொடை;
முத்தாரம் - முத்துமாலை

243. புலவர்களுக்கு ஈந்து, ஏமுடி பின் செல்லும் மரபு இக்கண்ணியில் பேசப்படுகிறது.

244. தரணி - உலகு

துன்றுசடா மகுடச் சோணசயி லர்க்குமிசை
யொன்றுஞ் சிவத்தலங்க ளுள்ளதற்கும் - என்றுமிகும்

பூசைவிழா நல்வளங்கள் பூணுந் திருப்பணியு
நேச மூடடைத்து நீதிபரன் - பேசரிய

கல்வி ரதசம்பருங் காதினா னைக்கலைச்
செல்விவள ரம்பைநகர்ச் செம்பியனை - வில்வமுடி

250. நாதரிரு தாள்பணியு நாகரிக னைக்கருணை
மாதவனைப் பூந்தா மரைப்புயனை - மேதினியிற்

பல்லக்கின் மேலுலவும் பாக்கியவா னைப்பதத்தாற்
கல்லைப்பெண் ணாகச்செய் காவலனை - வல்லொத்த

கொங்கைமட வார்மோகங் கொண்டபுகழ்க்
கோமானைச்
செங்கை தருமணக்குந் தென்னவனை - மங்குலெங்குந்

திங்களுமும் மாரிபெய்யத் தெய்வமறை யோர்வாழ்க
வங்கணிலத் தைப்புரக்கு மங்கசனைத் - துங்கவிறல்

அள்ளிலைவேற் கையவேள் அலங்கார பூபதியைப்
பிள்ளையெனப் பெற்ற பிரபலவான் - தெள்ளுதமிழ்

---

251. வல்லொத்த - சூதாடு கருவியொத்த.

252. திங்கள் - மாதம்; அங்கசன் - மன்மதன்.

254. அள் + இலை = அள்ளிலை; அள்ளிலை - கூரிய இலை;
பூபதி - அரசன்

255. பீறுங் கருணீகர் மெய்க்குலமு மேன்மையாய்க்
கூறும் பதஞ்சலியார் கோத்திரமும் - தேறுதிரா

யாயனநற் சூத்திரமு மன்பாக வேபடைத்த
தூயநற் சலமாந் துங்கமுகில் - நேயமுடன்

தந்தபர மேசமங்கை தான்வாழ வாழுமெங்கள்
சுந்தர ராசு முகிலையு - மைந்தருவார்

இந்திரனுக் கொப்பா யிருநிலத்தை யாளவந்த
சந்திர சேகரனாந் தன்மனையுங் - கொந்தலர்தார்த்

தென்மருவுந் தெய்வ சிகாமணிபூ பாலனையு
நன்மருக னென்றழைக்கு நாகரிகன் - (வென்)மருமக்

260. சிங்கார மாலுருவார் சித்தசனே ராகிவளர்
கங்கா தரனான கன்னனையும் - கொங்கலர்தார்

வன்னலென வந்த வயித்திய நாதனையு
முள்ளமகிழ் மைத்துனனென் றுன்னுமுகில் -
தெள்ளுதிரைப்

பேருல கெல்லாம் புகழ்ப்பிள்ளைத் தமிழ்புனைந்த
தீரனரு ணாசலமாஞ் செல்வனையு - மாரமிள

மூரலுமை தாள்பணியு மூர்த்தியப்ப வேளெனுங்கு
பேரனையும் பேரனெனப் பெற்றருள்மால் - சீருவும்

---

256. சலம் - நீர்

257. ஐந்தரு - ஐந்து மரங்கள். அவை, அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

259. தென் - அழகு, இனிமை; பூபாலன் - அரசன்

அம்பைநகர் . . . முடனபாய னானதுரை
நம்பினபே ரைக்காக்கு நன்னயவேள் – செம்பொன்

மலையா னமர்க்கு மலையான்சொல் லெண்ணெண்
கலையான மறுவைக் கலையா – னிலவார்

சடையான் பணியச் சடையான் றருப்பொற்
கொடையார் மதனபோர்க் கொடையான் –
அடையாரை

வையான் தருமன்பு வைப்பான் கருணீகர்
துய்யான் தமிழுமிர்தந் துய்த்தருள்வான் –
பொய்யாஞ்சொற்

சொல்லான்றா தைவருக்குச் சொன்னான்றுன்
மார்க்கமென்றுங்
கல்லானன் னூலெல்லாங் கற்றறிந்தான் –
சொல்லாருங்

கையான் பிறசமையங் கைப்பான்றீங் கானதொன்றுஞ்
செய்யான்யார்க் குங்கருணை செய்தளிப்பான் –
துய்யகஞ்சத்

270. தாரான் தமிழ்க்குநிதி தந்தா னிலையெனுஞ்சொல்
லோரான் றராதரங்க ளோர்ந்திடுவா – னேராரும்

---

265. அமர் – போர்

269. கைப்பான் – வெறுப்பான்; கஞ்சம் – துளசி

270. ஓர்ந்திடுவான் – நோக்கிடுவான்

வாசியான் சாதனமுன் வாசித்தான் வேறுதெய்வம்
பூசியான் வேளூரர்ப் பூசித்தா - னாசிலா

வம்பைநகர் தங்குமுகி லாங்கையக ளங்களிரு
கும்பமுலை மங்கையர்கள் கொண்டமயல் - விம்பமத

னஞ்சலர்கள் வந்துதொழு மஞ்சரண னங்கிளர்ம
தஞ்சொரியு ம்பலுள சங்கநிதி - மிஞ்சவளர்

கொண்டலிறை வன்கருணை கொண்டவிசை
யண்புலவர்
வண்டமிழு வந்தமதி மந்திரியுல - கெண்டிசையோ

275. கும்பரும் வந்துபணி யுங்கமழ்க தம்பவன
வம்பரனை யந்திபக லஞ்சலிசெய் - யும்புனித

நாற்றிசையோர் போற்றிடவே நாற்படையோ
டார்த்திடுபோர்
மாற்றலர்சீர் வீட்டியகூர் வாட்படையான் -
ஏற்றமதார்

---

271. பூசியான் - வணங்கான்; ஆசிலா - குற்றமில்லாத

272. அகளங்கன் - மறுவிலா மனத்தோன்;
விம்பமதனஞ்சலர்கள் - உடல்வலிமை கொண்ட பகைவர்.

273. அஞ்சலர் - பகைவர்

275. அந்திபகல் - இரவுபகல்

276. ஆர்த்திடுபோர் - ஆரவாரிப்புள்ள போர்;
மாற்றலர் - பகைவர்; ஓட்டுதல் - அழித்தல்.
மது + ஆர் = மதார்; தேன் நிரம்பிய.

தார்த்திருமால் கீர்த்திகள்சேர் தாட்டிகவாப
ஞாக்கமதால்
பார்த்திபனே ராய்ப்புவியாள் பாப்பயவேள் -
சீர்த்திருவார்

வேலன் பெருமுளைசை வீரனலங் காரமுகில்
பாலன் மகராச பாப்பயவேள் - ஏலவுந்தான்

அன்பன் வினைதீர்த்த நாதரிரு தாள்பணியும்
பண்பன் மகராச பாப்பயவேள் - ஒண்பொருளார்

280. பாவேந்தன் காவேந்தன் பாப்பயவேந் தன்கடல்சூழ்
பூவேந்த னம்பைநகர்ப் பூங்காவின் - மாவேந்து

மின்போல் விளக்கொளிபோல் வீரமதன்
செங்கோல்போற்[1]
பொன்போற் கவுத்துவ ரத்தினம்போற் -
என்போலென்

னாருயிர்போ லற்புதம்போ லான மரகதம்போல்
வேரிமலர் வாசம்போல் மேனகைபோற் - காருருவார்

பாட்டளிசேர் தார்க்கருணைப் பாப்பயவேள் காம்பீலி
நாட்டிலுள பெண்போல் நவரசம்போல் -
மேட்டிமையும்

---

280. கா வேந்தன் - வலிமையுள்ள வேந்தன்

281. கவுத்துவம்-ஒரு மணி

---

1. மயில் போல் என ஒரு சீர் மிகையாக உளது.

# அணங்குகண்டு வியத்தல்

கொண்டழகாய் நிற்பாரைக் கூர்ந்தெனது கண்ணாரக்
கண்டுவியப் பெய்திக் களிப்புற்றேன் - அண்டரூர்

மின்மாதோ சேடனூர் மேவுமா தோகமலப்
பொன்மாதோ வாசப் புனல்மாதோ - நன்மா

தரைமாதோ வேதனூர் சார்மாதோ மேன்மை
வரைமாதோ வின்ப ரதிமாதோ - தெரியாதென்(று)

எண்ணியெண்ணி யையமுளத் தெய்தும்பார்க்
கும்பொழுதிற்
கண்ணிமைக்குந் தோயுந்தாள் காசினியில் -
வண்ணமலர்ப்

பூந்தொடையும் வாடும் பொலிவையுங்கண் டிந்தவுல
கேந்திழைதா னென்றுதுணிந் திக்குமலர்க் -
கூந்தலினாள்

உள்ளக் குறிப்பை யுசாவி யறியவென்று
மெள்ளக் கருதியயல் மேவியன்பாய்க் - கிள்ளைமொழி

மானே குயிலே மயிலே வடியிட்ட
தேனே யனமே செழுங்கனியே - கானாருஞ்

சோலைக் கிளியே துலங்கு மணிவிளக்கே
மாலைக் குழலணங்கே மானினியே - பாலைப்

---

287. காசினி - உலகு

288. இங்கு மலர் - கள்ததும்பிய மலர்.

290. அனம் - அன்னப்பறவை.
கானாரும் - மணம் நிறைந்த.

பழித்தமொழி மாமணியே பைந்தொடியே பாங்காய்ச்
செழித்தமலர் கொம்பே செகமேல் - ஒழித்திடா

மின்னே குணமே விலைபட் டுறைபடாப்
பொன்னேசிந் தாமணியே பூங்கொடியே -
யென்னாளும்

மோகச் சமுத்திரமே மோகினியே காச ....
.... பேசும் பாவையே - யாகமுள

295. மன்மதன்செங் கோல்நடத்து மாமணியே
வாட்டமிலாப்
பொன்முளரி யேபுதிய போகமே - நன்மைதரும்

புண்ணியமே பாக்கியமே புத்தமுத மேயழகே
தண்ணளியே சங்கத் தமிழ்ச்சுவையே - நண்ணுயிரு

கண்ணே குலக்கொழுந்தே காமரச மேகமலப்
பெண்ணே துரைப்பெண்ணே பெண்ணரசே -
பண்ணோர்சொல்

தாதியரில் வாமலுநீர் தான்றனியே தாரகை
மாதரசே யிங்குவந்த மார்க்காமன்ன - சீதமலர்க்

காவினறும் போதுகொய்யக் காதலாய் வந்தீரோ
வாவிநறு நீராட வந்தீரோ - பூவனைய

300. செங்கமலத் தாளிணையுஞ் சிற்றிடையுந் தான்வருந்த
விங்குவந்த தென்னவியல் புவிரகா - ணுங்கமலப்

---

293. உறைபடா - உறைத்துப்பார்க்காத.

295. முளரி - தாமரை

299. போது-மொட்டு

பாதச் சுவடுறவிப் பார்செய்த பாக்கியத்தை
யேதென் றெடுத்து ரைப்போஞ் - சாதுரிய

வார்த்தைமயி லேகுயிலே வாஞ்சையா யென்முகநீர்
பார்த்தொருசொல் சொல்லவைப்பீர் பச்சமென் றுங் -
கீர்த்திகொண்ட

பைம்பொனே யென் றனைநீர் பார்த்துமொரு
வார்த்தைசொன்னா
லூம்பழை வாய்முத்து தீர்த்திடுமோ - வம்பரஞ்சூழ்

இப்புவியி லும்மைப்போ லெங்கும்யான் கண்டதில்லை
யொப்பிலா வாரமுதே யோவியமே - செப்புவியா

305. பேரே துமதுகுலப் பேரே திருந்துவரு
மூடி தெனக்கு முரைப்பீர்காண் - வாரேறு

கொங்கைமட வீரென்மேற் கொண்டமய லாலோவின்
றிங்கினிதாய் வந்தீ ரியம்விரகாண் - செங்கனிவாய்ப்

பைந்திருவே நீர்பாத சாரியாய்ப் பைங்காவில்
வந்ததென்ன காரணங்காண் வையகத்தி -
லந்தனைப்போல்

---

303. அம்பரம் - கடல்.

306. மயல் - மயக்கம், ஆசை; விரகம்-காமம்.

307. பைங்கா - பசிய பூங்கா.

தண்ணளியு மாறம் தயவும்யார்க் கும்வருமோ
பெண்ணமுதே வாய்திறந்து பேசவீர்காண் -
உண்ணினையென்

சிந்தை களிக்கத் திருவாய் மலர்ந்தொருசொல்
வெந்தனைப்பார்த் தேயுரைத்தீ ரென்றக்கால் -
கந்தமிகுஞ்

310. சோலைமலர் கொய்துமக்குச் சூட்டேனோ
சொன்னபடி
வேலையெல்லாஞ் செய்தருகில் மேவேனோ -
கோலமணிக்

காளாஞ்சி யேந்தேனோ கட்டு மடப்பமதற்
காளாகே னோமுலைமே லன்பாக - நீளாமல்

தொய்யி லெழுதேனோ சுடர்விடுவா ளாம்விழிக்கு
மையெழு தேனோதாள் வருடேனோ - செய்யமலர்க்

காலினாற் காட்டினதைக் கையினாற் செய்யேனோ
வேலெனுங்கண் ணாரணங்கே மெல்லியலே -
பாலெனுஞ்சொல்

308. தண்ணளி - இரக்கம்; மாறும் - வழங்கும். ஓலையில் 'மாறம' என்றுளது.

309. கந்தம் - மணம்.

310. கொய்து - பறித்து; மேவுதல் - அடைதல்.

311. காளாஞ்சி - எச்சில் கலசம்

நுண்ணிடைமா னேகருணை நோக்கருளி
னாலெளியேன்
எண்ணநிறை வெறியின்ப மெய்தேனோ -
திண்ணுலகில்

315. தஞ்சமென வந்தோரைத் தாங்கினாற் கீர்த்தியென்ப
தஞ்சுகச்சொன் மானே யறியீரோ - கிஞ்சுகவாய்

மங்கையே நாணமின்னம் வைத்தீரென் றாற்புணர்ச்சிக்
கங்கமல்ல நீரறியா தல்லவே - கொங்கைமுகங்

காட்டி மதிவதனங் காட்டியெனக் காசைவலை
பூட்டிநீ ரிதுமக்குப் புண்ணியமோ - வாட்டடங்கண்

மாதரசே மாநிலத்தில் வாய்திறந்து பேசாத
தேது நிமித்தியங்கா ணேந்திழையே - போதிலமர்

காரிகையே யும்மிடத்திற் காரைக்கால்
கண்டேன்சொல்
லோரு மணித்திருவா ரூர்கண்டே - னேருலவும்

320. வில்லையைக்கண் டேன்குமிழ் மேகண்டேன்
பாப்பயவேள்
நல்லவளஞ் சேருமம்பை நான்கண்டேன் -
சொல்லொணாச்

செய்யபவ ழக்காட்டைச் சீராய்க்கண் டேன்கருப்பூ
ரையமிலா மற்கண் டகமகிழ்ந்தேன் - துய்யநல

மார்கும்ப கோணமுட னார்க்காடுங் கண்டுவந்தேன்
சீர்கமழுந் தேனே திரவியமே - ஏர்கதித்த

நாகபட்டி னங்கூடல் நன்னகர்கா ணாமலப்பாற்
றோகை போகத் துணிவேனோ - மோகவிடாய்

தீராவனக் கோரிரண்டு செவ்விளநீர் நீர்கொடுத்தாற்
பேரின்ப மெய்திப் பிழையேனோ - வேரிமலர்ச்

325. செந்தேனே யன்பாய்த் தினமு மரைப்பணநீர்
தந்தேவல் கொள்ளத் தயவுவைப்பீ - ரந்தோதா

னெள்ளளவு நெஞ்ச மிரங்கலையே யானாலு
முள்ளவு முருக்கோ வுருக்கிரும்போ - வள்ளலையார்

வேற்றடங்கண் மின்னே விசித்திரமே மென்கைக்கு
மேற்றமுள வேந்திழையே யென்றுவந்து -
போற்றிநின்று

நானாசை கொண்டு நயந்துரைத்த வார்த்தையிலொன்
றானாலுங் கேட்டுங்கே ளாதவர்போற் - றேனாருங்

கன்னாலனுஞ் சொல்ல ஈர் கடைக்கணாற்
பார்த்தினிய
புன்னகையே செய்துமெல்லப் போயினார் -
பின்னழகுங்

## தலைவனின் பிரிவாற்றாமை

330. கண்டுதெரி சித்துக் கலங்கினேன் காதலுளங்
கொண்டுநெடு மூச்செறிந்து கொண்டிருந்தே -
னொண்டொடியார்

நின்றவடி யின்சுவட்டை நேசமுடன் கண்ணிலொற்றிக்
கன்றினேன் சென்றவழி காண்கிலே - னன்றியுளான்.

---

329. கன்னல் - கரும்பு

331. கன்றினேன் - வாடினேன்.

பந்தா முலையும் பவழவித ழுங்குவியாச்
செந்தா மரைமுகமுஞ் சேல்விழியுங் - கொந்தாரா

ரோதியுமின் னாமிடையு மொண்டொடிக்கோ
கைவீச்சுஞ்
சோதிசெயு முத்தரிகத் தோளிணையுஞ் - சீதமஞ்சார்

வண்ணமலர்ப் பூங்காவில் வந்த வனப்புமென்றன்
கண்ணைவிட்டு நீங்கா ... தென் - றெண்ணிலா

335. வந்துலைதய மாகமந்த மாருதத்தே ரேறிமதன்
சிந்தை வெகுண்டெய்திச் சிலைவளைத்துக் - கந்தமலர்

அம்பினால லென்னுடம்பை யம்புக்கூ டாக்கினோன்
வெம்பினே னொந்தேன் மெலிவுற்றேன் - தம்பமென

நின்றலுற்றே னஞ்சினே னெட்டுயிர்ப்புக்
கொண்டுகொண்டு
சென்றுலவி ... தயங்கினேன் - குன்றிகழுங்

கானடவல மானபலன் கைமேற் பலித்ததென்று
வாடினேன் மெத்த மயங்கினேன் - பேடிழந்த

வன்றிலைப்போ லானே னலைந்தேன் பரிதவித்தேன்
குன்றினேன் வீழ்ந்தேன் கொதித்தே - னொன்றும்

---

332. சேல் - கெண்டைமீன்

333. மஞ்சு - மேகம், பனி;

334. வனப்பு - அழகு

335. மந்தமாருதம் - இளந்தென்றல்; சிலை - வில்;
கந்தமலர் - மணமிகுமலர்;

338. பேடு - பெட்டை

# கனவிற் காணுதல்

340. நினைவயர்ந்தேன் மெய்யறிவு நீங்கினேன் வஞ்சக்
கனவில் வளைவரக் கண்டேன் - மனதுவந்து

சென்றெதிரே நின்றுமலர்ச் செஞ்சரணைத்
தெண்டனிட்டேன்
பொன்றிகழ்கார் கண்டமயில் போன்மகிழ்ந்தேன் -
வென்றியுள

பாப்பயபூ பாலனையே பண்பாகப் பாடிவரு
நாப்புலவர் போலுவகை நண்ணினேன் - பூப்பதும

மங்கைநல்லார் வேற்கண் மகிமைமுழு தும்மருங்கிற்
பொ . . . ன்சென்றுநின்று போற்றினேன் -
வெங்கண்

அராமுக நேரல் குழ(ழ)வணங் கேமிகவும்
பராமுகமோ வின்னமென்னைப் பாரீ - ரிராமுகமே

345. யானகுழ . . . கடியென்மேற் கோபமின்னந்
தானிருப்ப தேதுமக்குச் சாற்றுவீர் - நானமலர்த்

தார்பொருந்துங் கோதையீர் தப்பென்மே
லுண்டானால்
ஆர்பொறுப்பார் நீர்பொறுப்ப தல்லாமல் -
சீர்பொருந்தும்

---

340. வளை - வளையலணிந்த பெண்

341. கார் - மேகம்

வண்டளவச் சேதாம்பல் வாய்திறந்து நீர்பேசீர்
கெண்டைவிழிப் பார்வைக் கிருபைசெய்யீர் -
முண்டகப்பூ

மானே நவமணியே வானோர்க்குங் கிட்டாத
தேனே மதனன் றிரவியமே - நானாடும்

வெற்றிமட வீரென்வும் வேண்டினேன் மெல்லிநல்லார்
சற்றுமுக நோக்கியன்பாய்த் தான்சிரித்தார் -
பொற்றொடியார்

350. சிந்தையறிந் தேன்மகிழ்ந்து சேர்ந்தணைய
வேளையிதென்
றெந்தனுளத் தெண்ணியவ னின்பமுற்றேன் -
கொந்தலர்தார்

மாதவிப்பூங் காவிலொரு வெண்பளிங்கு மண்டபத்துட்
காதலுடன் சென்றுவருங் காரிகையைத் - தாதுமலர்

மெத்தை மிசையிருத்தி மென்பா கிலைகொடுத்து
முத்தமிட்டுக் கொஞ்சி முகந்திருத்திக் - குத்துமுலை

மீதிற் களபமிகத் திமிர்ந்து மல்லிகைமென்
போதுமலர் மாலை புனைந்தனகங் - கோதியே

யெண்ணான் கிராகத் திசைமா லிசையாழின்
பண்ணாரு மம்பைநகர்ப் பாப்பயன்மேல் - விண்ணான

355. மாக வெனதுசெவிக் காரமுதம் போறுமுயர்
பாகதனைப் போலுமன்பாய்ப் பாடினாள் -
மோகமிஞ்சிக்

---

347. முண்டகப்பூ - கள்நிறைந்த பூ; தாமரையுமாம்.

351. காரிகை - பெண்.

கட்டிமுத்த மிட்டாள் கனிவா யிதழ்பருகி
வட்ட முலைநெருடி மன்மதனார் - திட்டமுடன்

கைகலந்து லீலைசெய்யக் கண்டுநகை
கொண்டுமின்னாள்
மெய்கலந்திட . . . . . . . . . . - வைகலந்த

நன்னயங்க ளுன்றிமண நண்ணு மயிர்தநிலை
மன்னு மிடத்தினில்வாய் வைத்தருந்திப் -
பொன்னுலகுங்

கன்னமதில் நாவிழையக் காலோடு காலிறுகப்
பின்னியித ழைச்சுவைத்துப் பின்னினிதா - யுன்னியிட

360. சாரிவல சாரிபல சாரியாய்ச் சுற்றிவரக்
காரிகையார் மெய்யிறுகக் கையிறுக்கி - வேரிமலர்ப்

பொன்னான மாது புகல்வான் மழலைமொழி
யென்னாணை தாழா தினியென்றே - மின்னாருடன்

... ... ளகத்தொரு கட்டியணைத்
திடையிற் றுடைவைத் திணைவித் - திடையொத்

தசையத் தனவெற் பசையப் பணிமுத்
தசையக் குழல் ... - கசிவுற்ற

இன்பமி தென்ப னெழுந்தசை யென்பளவ
னின்பர மென்ப னெருங்குவ - ளன்பொடு

365. கொஞ்சுவள் கொங்கை குலுங்கிட ...
வஞ்சரசந் ... தந்தினி - மிஞ்சிடு

---

353. அளகம் - கூந்தல்

361. புகல்வாள் - கூறுவாள்.

தாசையுண் மீறு தடாவிது வேளையுன்
னேசம தேமன நேடிட - நீசெயு

* * *

உலைவாய் மெழுகா யுருகினே னோங்கு
மலைவாய்த் துரும்புபோ லானேன் - மலைவாக.

நின்றேன் மரம்போல நெடுமூச் செறிந்திருந்தே
னன்றெதுங் காணே னடுங்கினே - னென்றேனும்

வன்கால திக்கின் மலைவாய் மருவிவ ...
தென்கால்வந் தாடாடச் சிந்தைநொந்தேன் -
மென்காவி

370. லிப்படியான துன்பமெய்தி யேங்கிநிற்கும் வேளையிலே
துப்புரவாய்ப் பேரறிவு தோன்றிடவே - யப்பொழுது

## மடல் ஊர்வேன் எனல்

காம மிகுந்து கவலையுற்ற பேர்க்குலகில்
ஏம மடலல்ல தில்லைவலி - யாமென்று

சொன்னதிரு வள்ளுவனார் துய்யமலர்த் தாடொழுது
முன்னிமட லூர முயன்றுவந்தேன் - மின்னுகனி

வாயாரை முன்கனவில் வாய்த்தாரை மற்றொன்றுங்
காயாரை யெந்தனையே காய்ந்தாரைச் - சாயாமற்

---

366. தடா-சுனை; நேடிட - விரும்பிட;

இதன்பின் பதின்மூன்று கண்ணிகள் அரிப்புண்டு, தொடர்பற்றுளன.

செப்பமுலை யாரையெந்தன் செப்பமுலைத்
தாரையன்பி
லொப்பிலா ரைத்திருவை யொப்பாரை - முப்புவியும்

375. விற்பாரை மெய்ப்புருவம் வில்லாரை வேள்மதனூல்
கற்பாரை யுள்ளமேத்தக் கல்லாரை - நற்பானேர்

சொல்லாரை நல்வசனஞ் சொன்னாரைத் துன்னுகுழற்
செல்லாரைக் காவிலென்பாற் சென்றாரை - மல்லாருந்

தாராரை யெற்குமயல் தந்தாரைச் சாலவுக்குற்
றோராரை யெப்பொருளுந் தேர்ந்தாரை - தேராக

## மடற்கோலம்

வார்மடல் தன்னிலவர் வன்கண்மை நீக்கியெழி
லார்மட மான்வடிவெல் லாமெழுதி - வீரசடை

379. பின்னியிசை வாயிலங்கப் பேரெலுமிச் சம்ப
... ... ... ... ... ... ...

நூல் முற்றும்.

---

379. இதன்பின் சில கண்ணிகள் சுவடியில் இல.

## மடல் நூற்கள்

| வ. எண் | நூலின் பெயர் | ஆசிரியர் | அச்சிடப்பட்ட விவரம் |
|---|---|---|---|
| 1. | சிறிய திருமடல் | திருமங்கையாழ்வார் | அச்சிடப்பெற்றது |
| 2. | பெரிய திருமடல் | " | அச்சிடப்பெற்றது |
| 3. | வருண குலாதித்தன் வளமடல் | சந்திரசேகர கவிராஜ பண்டிதர் | அச்சிடப்பெற்றது (1875) |
| 4. | களமடல் | தத்துவராய சுவாமிகள் | அச்சிடப்பெற்றது (1867) |
| 5. | சித்திரமடல் | காளமேகப் புலவர் | அச்சிடப்பெற்றது |
| 6. | உலாமடல்(அல்லது) சமுத்திரவிலாசம் | முத்துப்புலவர் | அச்சிடப்பெற்றது |
| 7. | தாயுமானவர் மடல் (உலாமடல்) | - | அச்சிடப்பெற்றது |
| 8. | எட்டப்ப நாயக்கன் மடல் | - | அச்சிடப்பெற்றது |
| 9. | கன்னிவாடி நரசிங்கப் பனாயக்கர் வளமடல் | - | - |
| 10. | மீனாட்சி நாத பிள்ளை விசித்திர மடல் | - | கல்கத்தா தேசிய நூலகத்தில் சுவடி வடிவில் உள்ளது. அச்சிடப்பெறாதது. |
| 11. | நல்லபிள்ளை சித்திர மடல் | பொன்னம்பலராச பூபாலன் | G.O.M.L. பருவ இதழில் வெளி வந்துள்ளது. (1968) |
| 12. | அழகர்சாமி மடல் | ஈழம் கனகசபைப் புலவர் | அச்சிடப்பெறாதது |
| 13. | திருச்செந்தூர் உலாமடல் | - | அச்சிடப்பெறாதது. |

72